Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில்
புதுப் பொலிவுடன்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
கோடைக்கால விலைக்கழிவு ஜூன் 30 வரை மட்டுமே
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலையில்
BBQ
தொடர்பு: 0771064385 0776943479
70/6, K.K.S. Road, JAFFNA
(C/1615)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 258

















# ஐ.நா.வுடன் இணைந்து இலங்கை செயற்பட வேண்டும்



(ஜெனிவா)

இலங்கையில் முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு ஐ.நாவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்தும் விடயத்தில் இலங்கை ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகர் அலுவலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் பான் கீ மூன் மேலும் தெரிவித்தார்.

இதற்கு தன்னால் இயன்றளவு ஊக்கமளிக்க முடியும் என பான் கீ மூன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை செயற்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் பிரேரணை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளதை பான் கீ மூன் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் வட பகுதியில் பாதுகாப்புப் படைகள் குறைக்கப்பட்டதையும்

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்பாளருக்கு பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியானதில் முன்னிலை வகித்த புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரின் இல்லம் நேற்றுக் காலை இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கானமையை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் சங்கம் நேற்று வைத்தியசாலையில் ஒருநாள் அடையாள பணிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடு மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட முடிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆசிரியர்கள் இடமாற்றத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் யோசப் ஸ்டாலின் இச்சங்கத்தின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட 96 ஆசிரியர்களை இணைத்து மனித உரிமை ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றை கையளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர் வீடு மீது தாக்குதல்; வைத்தியசாலையில் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரின் கந்தர் மடம் பகுதியில் உள்ள வீடு நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தமையைக் கண்டித்தும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குமாறும் கோரி யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் நேற்று வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாக ஒரு நாள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.



நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வைத்தியர் ஜெயக்குமார் வீட்டில் உறக்கத்தில் இருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாதவர்கள் அவரது வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன் வீட்டிற்குள் ஒயிலையும் தாறுமாறாக ஊற்றிச் சென்றதுடன் தேசத் துரோகிக்கு இதுதான் தண்டனை என்ற வாசகமும் அரைகுறைத் தமிழில் எழுதி அட்டையை தொங்க விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்தே யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் தமது அடையாள

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச காணிகளில் குடியிருந்தவர்களுக்கு வழக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியிருப்பவர்களுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனைக்குச் சொந்தமான காணியில் பல குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளன. அவர்களை அந்தந்தக் காணியில் இருந்து வெளியேறும்படி ஏற்கனவே கண்டாவளை பிரதேச செயலாளரினால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இவர்களை அந்தக் காணிகளில் இருந்து 40

19 ஆம் பக்கம் பார்க்க

# வன்னி வர்த்தகர்களுக்கு இந்திய அரசு நிதியுதவி

### சிதைந்த கட்டட புனரமைப்புக்கு 10 கோடி ரூபா

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் போரினால் சேதமுற்ற வர்த்தக நிலைய கட்டடங்களை புனரமைப்பதற்கு 10 கோடி ரூபா நிதியுதவியை வழங்க இந்தியா முன்வந்திருக்கின்றது.

இலங்கை வணிகக் கைத்தொழில் ஒன்றியங்கள் சம்மேளனத்தின் கோரிக்கையையடுத்து, இந்த நிதியுதவி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, கவனிப்பாரற்றுள்ள வர்த்தக சமூகத்தினருக்கு உதவ வேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவிடம் விடுத்த வேண்டுகோளின் படியே இந்த நிதியுதவி கிடைத்திருப்பதாக வணிகக் கைத்தொழில் ஒன்றியங்கள் சம்மேளனத்தின் ஆலோசகரான மூத்த விரிவுரையாளர் டபிள்யூ.ஜே. சூசைரட்ணம் தெரிவித்தார்.

எனினும், யுத்தத்தினால் பாதிகக்கப்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்குமாக இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிக்கப்படவில்லை.என்றும் இதனால் முதற்தடவையில் உதவி கிடைக்காதவர்களுக்கு இரண்டாம் கட்டமாக உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான இந்த உதவித்திட்டத்தில் இலங்கை அரசாங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## உறவுகளைத் தொலைத்தவர்களிடம் மாவை எம்.பி. தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

காணாமல் போனவர்களின் உறவினர்களை அழைத்து வடக்கு மாகாணசபை தேரிதலில் தமக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடுத்தார் மாவை சேனாதிராசா.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் வடமராட்சி மணல்காட்டில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், காணாமல் போனவர்களின் விபரங்கள் சேகரிக்கப் படவேண்டும், அவர்களை கண்டுபிடித்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் கூறினார். இவ்வாறு காணாமல்போனவர்களின் விடுதலையை துரிதப் படுத்த வேண்டுமென்றால் தமிழ் மக்கள் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறினார்.

கூட்டமைப்பு வெற்றி பெற்று சர்வதேசத்தின் அழுத்தத்தைப் பிரயோகித்து காணாமல் போனவர்களை விடுதலை செய்ய முயற்சிக்கும் என்றார். இக்

19 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் விலை குறைப்பு எப்போது சாத்தியமாகும்

### அமைச்சர் ஹெகலிய விளக்கம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருட்களின் விலை வீழ்ச்சியானது நீண்டகால நோக்குடையதாக அமைந்தால் அதன் பலனை இலங்கை நுகர்வோர்களும் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# வேலைவாய்ப்பில் புதிய அணுகுமுறை

## அதே மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை



வேலைவாய்ப்பு வழங்கும் விடயங்களில் முதலில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது எமது கொள்கையாகும் அதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் வேலையற்ற பிரச்சினைகளுக்குத தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையுண்டு என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தொழிற்பயிற்சியினை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வீல் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு பன்மொழியாற்றல் பன்முகத் திறன்கள் என்பது இன்றைய காலத்தின் தேவை எனவும் சுட்டிக்காட்டினார்.

அரச மற்றும் தனியார் துறைகளில் இலகுவில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் தனிநபர் தகைமைகளை வளர்த்துக்கொள்வதற்கும் ஒருவர் தன்னுடைய மேலதிக தகைமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் இது போன்ற தொழிற்பயிற்சி நிலையங்கள் இன்மையால் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் வேலையற்றவர்களாக காணப்பட்டனர் ஆனால் தற்போது மீள்குடியேற்றத்திற்கு பின்பு இம்மாவட்டத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அலுவலகம் திறக்கப்பட்டு பெரும்பாலான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களில் பெரும்பாலானவர்கள் தொழிலையும் பெற்றிருப்பது மகிழ்ச்சியான விடயமே.

நேற்று இடம்பெற்ற இந் நிகழ்வில் தொழிற் பயிற்சியினை முடித்துக்கொண்ட 55 மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி நிலைய பயிற்சி ஆசிரியர் தினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளர் வினோதராஜா, ஈழமக்கள ஜனநாயகட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் பயிற்சினை முடித்துக்கொண்ட இளைஞர், யுவதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நேற்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் ஹயர்ஸ் வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதுடன், அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் நடைபெற்ற இவ் விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கணேசபுரத்தைச் சேர்ந்த எஸ்.இராமச்சந்திரன் (வயது-65), என்.விஜயதீபன் (வயது-24) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

கரடிப்போக்குப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து டீசல் எடுத்து வரும் வேளை கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் முன்பாக கணேசபுரத்திற்கு மோட்டார் சைக்கிளைத் திருப்ப முற்பட்ட போது எதிரே வந்த ஹயஸ் வாகனம் இவர்கள் மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் இராமச்சந்திரன் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

# அலங்கார உற்சவம்

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று 10 ஆம் நாள் (26.06.2012) ஆனி உத்தரத்தன்று காலை சங்காபிஷேகமும், மதியம் தீர்த்த உற்சவமும் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசைநடைபெற்று திருவூஞ்சல் பாடப்பட்டு ஞானவைரபவர் சாமுண்டாதேவி சமேதராக விநாயகப் பெருமானுடன் மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட கேடக வாகனத்தில் கிராம வலம் வருவார். எதிர்வரும் 27ஆம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

# ஒரு கோடி பஞ்சாட்சர ஜெபம்!

(யாழ்ப்பாணம்)

உலக மக்கள் நன்மைக்காக வேண்டி ஒரு கோடி பஞ்சாட்சர ஜெபம் யாழ்ப்பாணம் நல்லூர் பிரசித்தி பெற்ற இரண்டாம் கைலாசம் என அழைக்கப்படும் கைலாசப் பிள்ளையார் ஆலய சிவன் திருவிழா நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நாளை பிரதோசதினம் பிற்பகல் 3.36 மணிக்கு ஆலய பரிபாலகர்ளான சிவாச்சார்ய பெருமக்களின் அயராத முயற்சியால் ஒரு கோடி பஞ்சாட்சர ஜெபத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதில் ஆலயத்திற்கு வரும் அடியார்கள், பக்தர்கள் அனைவரும் இப்பஞ்சாட்சர ஜெபத்தை செய்து ஆவாகனம் செய்துள்ள கும்பத்தில் பூவும், நீரும் சாத்தி ஜெபம் செய்த எண்ணிக்கையை பதிவேட்டில் பதிந்து செல்லவும் ஒருவர் எத்தனை முறையாகிலும் ஜெபம் செய்யலாம்.

எண்ணிக்கைப் பதிவேட்டில் பதிவு செய்வதை மறக்காதீர்களென அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கொண்டலடி வைரவரின் வாகனமும் திருட்டுப் போனது

(திருநெல்வேலி)

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள கொண்டலடி வைரவர் கோவிலில் இரண்டு வாகனங்கள் களவாடப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

குதிரை மற்றும் நாய் வாகனங்களே திருட்டுப் போயுள்ளன. முன் மண்டபத்துக்குள் நாய் வாகனமும், மற்றொரு மண்டபத்தில் குதிரை வாகனமும் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உள் மண்டபத்திலும், வெளி வாயிலிலும் மின்சார வெளிச்சங்கள் போடப்பட்டிருந்ததாலும், மண்டபத்துக்குள் இருந்த வெளிச்சம் திருடர்களினால் அணைக்கப்பட்டிருந்ததாகவும் பூசகர் தெரிவித்தார்.

மாலைப் பூசையை முடித்துக் கொண்டு கோவிலைப் பூட்டிவிட்டுச் சென்றவர் மறுநாள் காலையில் வாயிலைத் திறந்து கொண்டு வந்தபோது வாகனங்கள் களவு போயிருந்ததாக மேலும் அவர் தெரிவித்தார்.

கோவிலைச் சுற்றி உயரமான மதில் சுவர்கள் காணப்பட்டன. தெற்கு வாயில் கதவும், கிழக்கு வாயில் கதவும் பூட்டப்பட்டிருந்தன. உடைக்கப்படவில்லை. உயரமான மதில் சுவர்களுக்கு மேலாகவே இவ் வாகனங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

இத்திருட்டுப் பற்றி யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (137)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(மல்லாகம்)

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி பழனி நிர்மலா தேவி நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் மல்லாகம் மாவட்ட நீதவான் து.கஜிநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் ஓர் ஆயுர்வேத வைத்தியராகக் கிராமத்தில் பல வருடங்களாக மக்களுக்குச் சேவையாற்றி வருகிறார். அத்துடன் கிராமத்தின் சமய, சமூக வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஆர்வமாகச் செயற்பட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்தடை இரத்து

(யாழ்ப்பாணம்)

இன்று மின் தடை என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்குவேலி, கட்டுடை, சுதுமலை, கோண்டாவில், இணுவில் பிரதேசம், தாவடி, குளப்பிட்டிப் பிரதேசம், தட்டார்தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், நாச்சிமார் கோவிலடி, கொன்வென்ட் பிரதேசம், குருநகர்ப் பிரதேசம், பாஷையூர் பிரதேசத்தின் ஒரு பகுதி, கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களுக்கான மின் தடைகள் இரத்துச் செய்யப்படுகின்றன என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மூன்றாம் திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டில் மக்கள் சாந்தி, சமாதானத்தோடு வாழவேண்டுமென பிரார்த்தித்து நாயன்மார் நால்வரை ஆலயங்களில் எழுந்தருளச் செய்து மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருவது அனைவரும் அறிந்ததே.

அந்தவகையில், இன்று காலை 7.30 மணியளவில் திருநெல்வேலி அருமிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் தேவஸ்தான பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் மூன்றாந்திருமுறை முற்றோதல் ஆரம்பித்து தினமும் மாலை பூசையுடன் முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அனைவரும் பங்கு பற்றிப் பயன்பெறுமாறு வேண்டப்படுகிறது.

# நல்லூரில் விசேட வழிபாடு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொன்விழாவினை முன்னிட்டு இந்து சமய பூசை வழிபாடுகள் இன்று முற்பகல் 7.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சிபெற்கோ எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் அனுசரணையுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் பிரிவு மற்றும் பிரதேச காரியாலயம் (வடக்கு) ஆகியோரின் வழி நடத்தலுடனும் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



5 ஆவது அகவையில்




பெயர் : ஜெயகன வைஷ்ணவி

முகவரி: 4ஆம் வட்டாரம், துறையூர், வேலணை



நூலக விழிப்புணர்வுச் செயற்பாட்டின் தொடர் நிகழ்வுகளில் ஒன்றாக மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தரம்-5 பாடசாலை மாணவர்களுக்கான மாதிரி புலமைப் பரிசில் பரீட்சையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பகீரதன் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்வதையும், பரீட்சையில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# காணாமற்போன சிறுவன் கல்வியில் மிளிர பெற்றோர் மூலம் நடவடிக்கை எடுப்பேன்

## பருத்தித்துறை நீதவான் அறிவுரை

(வடமராட்சி)

பாடசாலையில் அதிக புள்ளிகளைப் பெற்று கல்வியில் மிளிர தேவையான உதவிகளைப் பெற்றோர் மூலமூாக கிடைக்கச் செய்ய ஆவன செய்வேன் என பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவருக்கு பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் ஆலோசனை கூறியுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி காணாமற்போய் மீண்டும் வீடு திரும்பிய கெருடாவில் பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரக் குருக்கள் செந்திரன் (வயது - 15) என்ற மாணவனுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இந்த அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

குறித்த மாணவன் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருததித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரும், யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவும் தத்தமது அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளன.

கடந்த 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு தனது பெற்றோரிடம் ரியூசனுக்கு மாதாந்த பணம் கட்ட வேண்டும் எனக்கூறி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவைப் பெற்று சைக்கிளில் சென்றுள்ளார். சைக்கிளை தொண்டைமானாறுப் பகுதியில் உள்ள பிரபல கடை ஒன்றில் ஒப்படைத்துவிட்டு யாழ்ப்பாணம் சென்றுள்ளார்.

அங்கிருந்து வவுனியாவுக்குச் சென்று வவுனியாவில் இருந்து பிறிதொரு பேருந்தில் கொழும்புக்குச் சென்ற மாணவன் அங்கு கடந்த 31.05.2012 ஆம திகதி வரையும் கொழும்புப் பகுதியில் உள்ள இடிந்த கட்டடத்தில் தங்கியிருந்து விட்டு, நகரை சந்தோசமாகச் சுற்றிப் பார்த்துள்ளார். பின்னர் கொணடு சென்ற பணம் முடிவடையவே கடந்த முதலாம் திகதி பஸ் வண்டியில் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி இவர் யாழ்ப்பாணத்தில் நின்றபோது குறித்த மாணவனின் இடத்தைச் சேர்ந்த அயலவரினால் கண்டு பிடித்து வல்வெட்டித்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப்படடார்.

இதன்பின்னர் மன்றில ஆஜா படுத்தப்பட்ட மாணவனுக்கு நீதிபதி பல புத்திமதிகளைக் கூறினார். இம்மாணவனின் பெற்றோருக்கும் பற்பல ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் மாணவனை தந்தையாரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (116)

# சிங்கள வகுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினர் நூலக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பித்த சிங்கள வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ்வகுப்புக்கள் பிரதி திங்கள், புதன்கிழமைகளில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை நடைபெறும் எனவும், இதில் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பயில விரும்புவோர்கள் கலந்து பயன்பெறுமாறு பொது நூலகர் அறிவித்துள்ளார். (11)

# அகில இலங்கை ரீதியாக சிறுகதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறுகதைப்போட்டி ஒன்றை அகில இலங்கை ரீதியாக நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியில் சமர்ப்பிக்கபபடும் ஆக்கங்கள் இதுவரை எந்தவொரு ஊடகத்திலும் வெளிவந்ததாக இருத்தலாகாது. போட்டியாளர்கள் படைப்புக்களோடு தமது பெயர், விபரங்களை வேறாக இணைத்து அனுப்புதல் வேண்டும். பரிசில் பெறும் கதைகளோடு மேலும் தகுதியானவை நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறுகதைத் தொகுப்பு நூலிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.

போட்டியாளர்கள் படைப்புக்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னராக மலர்க் குழு, நூற்றாண்டு விழா, யாழ். தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது thondaimanaruvid@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவேண்டும் இதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியான தாகும்.

இப்போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு முறையே 5000, 3000, 2000 பணப்பரிசில் வழங்கப்படும். மேலும் 5 பேருக்கு 1000 வ்தம் வழங்கப்படும் என மலாக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

முன்னாள் அரச மொழி கரும திணைக்கள உதவி ஆணையாளர் அமரர் பிள்ளைக்கவி சிவராஜசிங்கத்தின் 31 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ் வழி ஆங்கிலம் என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி பகல் 12 மணிக்கு நெல்லியடி முருக மூர்த்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (109)

# ஆன்மீக சொற்பொழிவு

குப்பிளான் - சொக்கவளவு சோதி விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவ காலத்தில் தினமும் விசேட சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் 8 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன் 'விநாயகப் புராணம்' பற்றியும் 9 ஆம் திருவிழாவான நாளை சனிக்கிழமை உளவளத் துணையாளர் நா.நவராஜ் "எது வழிபாடு" என்னும் விடயம் பற்றியும் 10 ஆம் திருவிழாவான நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை க.சிவகுமார் "கணபதியின் மகிமை" என்னும் விடயம் பற்றியும் சொற்பொழிவாற்றுவார். (06)

# ஆலய வாகனத் திருட்டு; நான்கு பேர் கைது



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்திலும், யாழ். கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவிலிலிருந்தும் திருட்டுப் போயிருந்த சுவாமி வாகனங்கள் முலவப் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில் இருந்து யாழ். குற்றத்தடுப்பு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக இரண்டு பேரைக் குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்திருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

பல இலட்சம் ரூபா பெறுமதியான இந்த சுவாமி வாகனங்கள் குறித்த ஆலயங்களில் இருந்து திருடர்களால் திருடப்பட்டிருந்த சம்பவம் நகரில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பவர்களிடம் இருந்து விசாரணைகளின்போது மேலும் பல தகவல்கள் வெளிவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (பா)



வவுனியா - இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் இடம்பெற்றபோது பூசை வழிபாடுகள் இடம்பெறுவதையும், அந்தோனியார் திருச்சொரூபம் வீதி வலம் வருவதையும் காணலாம். (160)

# மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் குப்பைகள் கொட்ட தடை

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் குப்பைகள் கொட்டுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பு காரணமாக சிறிது காலமாக குடியிருப்பாளர்களின் கழிவுப் பொருட்களை உரப்பைகளில் கட்டி குறிப்பிட்ட இடங்களில் வைக்குமாறும், இவற்றை பிரதேச சபையின் வாகனங்கள் எடுத்துச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ் அறிவிப்பைத் தொடர்நது குப்பைக் கழிவுகள் கட்டிவைக்கப்பட்டு அவற்றை வாகனங்கள் எடுத்துச் சென்று வந்தன.

தற்பொழுது இக்கழிவுகளை குடியிருப்பாளர்கள் கண்டபடி வீதிகள் மூலை முடுக்குகளில் கொட்டி வருவதால் அவை போககுவரத்துக்கு இடையூறை ஏற் படுத்தி வருவதுடன், டெங்கு நோய் பரவுவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது.

ஆதலால் இவ்வாறு வீதிகளில் குப்பை கொட்டப்படுவது உடனடியாக தடை செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தமது குப்பைகளை தமது வீட்டு வளவுகளில் இனிமேல் அழித்துக் கொள்ள வேண்டுமெனவும் இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டு நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரப்படும் என வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் அறிவித்துள்ளார். (104)

# வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

வலி வடக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு.

**கவிதைப் போட்டி**

கஜவதனி பொன்ராசா, கோகிலானி இராஜ்குமார், விஜிதா சுரேஸ்குமார் (மகாஜனாக் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

விஜிதா சுரேஸ்குமார், மேதுஷா துரைசிங்கம், சு. சோபிகா (மகாஜனாக் கல்லூரி)

**கவிதைப் பாடல் போட்டி**

நாகராசா கபிலன், மகேந்திரநாதன் நிரோஜன், மனோகரன் நிருசன் (யூனியன் கல்லூரி)

**பாடல் நயத்தல் போட்டி**

சொர்ணலிங்கம் தருமதன் (யூனியன் கல்லூரி), சு.சோபிகா, விஜிதா பஞ்சலிங்கம் ( மகாஜனாக் கல்லூரி).

**திறந்த பிரிவு**

**பாடல் ஆக்கப் போட்டி**

வே.சிவராசா (மகாத்மா வீதி, அளவெட்டி), சா.தணிகாசலபதி, (மாரிசிட்டி அளவெட்டி), ந.சிறிஸ்கந்தராசா (அளவெட்டி மத்தி).

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

மாலாதேவி மதிவதனன் (அளவெட்டி, மத்தி), இந்திராணி ஈஸ்வரானந்தம் (பன்னாலை).

**விவரணப் போட்டி**

இந்திராணி ஈஸ்வரானந்தம் (பனனாலை), ஈ.நதீசன் (பன்னாலை).

**சிறுகதைப் போட்டி**

ப.உதயகுமார், ஞானேஸவரி உதயகுமார் (அளவெட்டி, வடக்கு), வேலாயுதம் சிவராசா (மகாத்மா வீதி, அளவெட்டி)

**கவிதைப் போட்டி**

அச்சுதநாயர் சோமேஸ்ராஜ் (மல்லாகம் தெற்கு), மாலாதேவி பதிவதனன் (அளவெட்டி மத்தி), மாணிக்கம் வடிவழகன் (அளவெட்டி மேற்கு).

**சிறுவர் கதைப் போட்டி**

பசுபதி உதயகுமார் (அளவெட்டி, வடக்கு), மாலாதேவி பதிவதனன் (அளவெட்டி, மத்தி), இந்திராணி ஈஸ்வரானந்தம் (பன்னாலை). (17)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(வலிகாமம்)

தெல்லிப்பளை மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதாக சங்கச்செயலாளர் க.காங்கேசன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் பன்னாலை சேர்.கனகசபை அ.த.க. பாடசாலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் செ.மகாதேவா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.குணாளன், க.சுரேஸ்பாபா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல் கணக்கறிக்கை சமர்ப்பித்தல், புதிய நிர்வாக சபைத் தெரிவு முதலான முக்கிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சகல அங்கத்தவர்களையும் தவறாது கூட்டத்திற்கு சமுகம்தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (06)

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம்.
ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம்.
-பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வாழ்வை அழிக்கும் வல்லாட்டம்!

பொதுவாகவே தமிழ்த் தேசியவாதத்தை, சுயலாபங்கள் பெருமிதங்களுக்காகத் தீவிரமாகத் தூக்கிப் பிடிப்பவர்களிடம் தர்க்க ரீதியான சிந்தனை எதுவுமிருப்பதில்லை என்பதைக் கண்கூடாகக் கண்டுவருகிறோம். விசேடமாக, இலங்கைக்கு வெளியே இருந்துகொண்டு ஈழத்தமிழர்களுக்காகத் தேசியவாதப் பெருங் குரலெடுப்பவர்களிடமோ சாதாரண சிந்தனை கூட இல்லாமல் குருட்டாட்டம் ஆடுவதைப் பார்க்க முடிகிறது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் அரசியல்வாதிகளை மட்டுமில்லை, அறிஞர்களை கல்வியாளர்களை தலயாத்திரைக்குச் செல்பவர்களை என்று எல்லோரையும் ஆர்ப்பாட்டம் பண்ணியும் அடித்தும் விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாக இருக்கிறது.

மறுபக்கம் அங்கிருந்தும் இங்கு நடிகர்களோ கலைஞர்களோ வரவும் விடாமல் மூர்க்கத்தனம் காட்டுகிறார்கள். அது மட்டுமில்லாமல் இங்கு நடக்கும் தமிழ் விழாக்களுக்கும் அறிஞர்களோ எழுத்தாளர்களோ வரக்கூடாது என்று மிரட்டுகிறார்கள். இழவு விழுந்த வீடாகவே எப்போதும் பாவனை பண்ணிக் கொண்டு எந்த கொண்டாட்டங்களும் இல்லாது இங்குள்ள நாமெல்லோரும் மூலையில் குந்தி இருந்து சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் கோலத்தையே அவர்கள் வரவேற்கிறார்கள்.

இவர்களது இந்த இரட்டைவேட மிகைநடிப்பு ஆர்ப்பாட்டங்களை பலரும் பலவிதமாக எடுத்துச் சொன்னாலும் கேளாச் செவியர்களாக நாடகமிடுகிறார்கள். தமிழ்நாட்டிலிருக்கும் இலங்கை அகதிகளின் அவலநிலைமைகளை எம்.எல்.ஏ. ரவிக்குமாரிலிருந்து எழுத்தாளர் அருந்ததி ராய் வரை எடுத்துச் சொன்ன பிறகும், அதைப் போய்ப் பார்க்கக் கூட எண்ணாமல் எங்கோ இருக்கும் நமது அவலங்களை நாமே நினைத்திராதபடி குரலெடுத்துப் பாடிக் கூத்துக் கட்டுகிறார்கள்.

நடிகர்களை வரவிடாமல் தடுக்கும் இவர்கள், அவர்கள் நடித்த படங்கள் இங்கு வருவதைத் தடுப்பதில்லை. தமிழ் திரைப்பட உலகம், இலங்கையுடனான தனது தொடர்புகளை முற்றாக அறுத்துக் கொள்வது என்று நினைத்தால், முதற்காரியமாக அவர்கள் தமிழ்ப்படங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும். தென்னாபிரிக்கா நிறவெறிக்கு உட்பட்டிருந்த போது இந்திய திரைப்படங்கள் அங்கு ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. இவர்கள் ஒருபோதும் அதைச் செய்ய மாட்டார்கள், வருமானத்தைப் பாதித்துவிடுமே!

ஒரு எதிரி வீட்டுக்கு வந்தால்கூட அவரை வரவேற்பதுதான் தமிழர்களின் கலாசாரம். இவர்களோ கோயில் யாத்திரைக்கென்று போகிறவர்களையும் அடித்துத் துவைத்துத் தமிழுணர்வில் வெறியாடுகிறார்கள். சவுதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் கூட விரோதம் உள்ளதுதான். ஆனால், எவ்வளவு பிரச்சினை இருந்தாலும் மக்காவுக்கு வரும் ஈரானிய யாத்திரிகர்களை அவர்கள் தடுப்பதில்லை.

தங்களையும் தமிழர்களாகச் சொல்லிக் கொள்ளும் இவர்களால், உலகின் பார்வையில் நாமும் நாகரிகமற்றவர்கள் என்ற முத்திரையைக் குத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவர்களோ சாதாரண மக்கள் சென்றுவரும் கப்பல் சேவையைக் கூட நடத்த விடாமல் உணர்ச்சிகரத் தமிழ்மானம் பேசி நடிக்கிறார்கள். தினமும் சுமார் ஐந்து விமானசேவைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடத்தப்படுகின்றன. அவைகள் பறப்பதை இவர்களால் நிறுத்த முடியாது. பாமர மக்களோடும் அவர்களது வாழ்வுப் பாடுகளோடும்தான் இவர்கள் உணர்ச்சி ஆர்ப்பாட்டங்களைக் கொட்டிக் கவிழ்க்கிறார்கள்.

இந்தத் தேசியத் தீவிரவாதப் பொங்குகைகளெல்லாம் நம்மை வாழ வைப்பதற்கானவையல்ல. நமது கஷ்டங்களிலும் இழப்புகளிலும் அவர்கள் ஒருசிலரது தமிழ்ரோசத் திருப்திகளைக் கொண்டாடிக் கொள்வதற்கானவையே!

- ஆசிரியர்

# இந்தியாவிற்கு வழங்கிய எண்ணெய்க் குதங்கள் அரசினால் மீளப் பெறப்படமாட்டாது

இந்தியாவுக்கு வழங்கப்பட்ட திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் மீளப் பெறப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க, அத்தகைய திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை எனக் கூறியுள்ளார்.

இவ்வாறான செய்திகள் ஊடகங்கள் ஊடாக வெளிவந்திருப்பதை நானும் அறிந்தேன். அத்தகைய திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இருப்பதாக நான் அறியவில்லை. சுருக்கமாகக் கூறப்போனால் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீளப்பெறும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் கிடையாது என லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் இந்த விவகாரம் குறித்து அரச தரப்பினருடன் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளாரென இந்திய இராஜதந்திர வட்டாரங்களிருந்து அறிய முடிகின்றது.

திருகோணமலையில் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்ட 99 எண்ணெய்க் குதங்களையும் அரசாங்கம் மீளப்பெறவுள்ளதாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊவா பல்கலையில் மட்டுமே அசம்பாவிதங்கள் இல்லை

இந்நாட்டில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களுள் ஊவா பல்கலைக்கழகத்தில் மட்டுமே ஆர்ப்பாட்டங்களோ, வேலை நிறுத்தங்களோ நடைபெறுவதில்லை.

அங்கு பகிடிவதை இல்லை. மாணவர்களின் அரசியல் அமைப்புக்கள் கூட அங்கு இல்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

தெற்காசியாவில் அதியுயர் கல்வி மட்டத்தைக் கொண்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

யுனெஸ்கோ நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்கள் தமது பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டுமென அவர் கூறினார்.

தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிலர் பல்கலைக் கழகத்தை பயன்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழகங்களை நடத்திச் செல்வதற்கென திறைசேரி ஆண்டுதோறும் 21 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதில் ஒன்பது பில்லியன் ரூபா சம்பளம் வழங்குவது உட்பட ஏனைய கொடுப்பனவுகளுக்காகவே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரத்திலான தளபாடங்கள் சட்டத்தில் வந்து திருத்தம்

மரம் மற்றும் மரத்திலான. வீட்டுத் தளபாடங்கள் தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன.

நடைமுறையில் உள்ள சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை கருத்திற்கொண்டு, சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் பி.எம்.யூ.பி.டி.பஸ்நாயக்க தெரிவித்தார். புதிய விதிமுறைகளுக்கு அமைய, சந்தனம், கருங்காலி உள்ளிட்ட நான்கு வகையான பெறுமதிமிக்க மரங்களினால் தயாரிக்கப்படும் வீட்டுத் தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வகையான வீட்டுத் தளபாடங்களையும் அனுமதிப் பத்திரமின்றி நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் கொண்டு செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தவிர வெட்டப்பட்ட மரங்களைக் கொண்டு செல்வது தொடர்பான சட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றினால் கைது செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் செல்பவர்களைக் கைது செய்ய மீளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

எனினும், அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த சட்டங்களில் ஓரிரு வாரங்களுக்கு முன்ணர் அரசாங்கம் தளர்வை ஏற்படுத்தியிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பில் மீண்டும் சட்டரீதியான சிக்கல் தோன்றியுள்ளதால் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வது அவசியமாகும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த சட்டத்தின் பிரகாரம், மணல் ஏற்றிச் செல்வதற்காக அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கமைய பகமுன பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணலை ஏற்றிச் சென்ற 19 லொறிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது கைதானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, முன் அறிவித்தல் எதுவுமின்றி கைது செய்யப்படுவது நியாயமற்றதாகும் என்று மணல் ஏற்றிச் செல்வோர் குறிப்பிடுகின்றனர்.

இதுகுறித்து விடயங்களை அறிந்துகொள்வதற்காக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரி ஒருவரைத் தொடர்புகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை.

# மடுமாதா உற்சவம் 23 ஆம் திகதி ஆரம்பம்

மன்னார் மடுமாதா ஆலயத்தின் ஆடி மாத உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ் பிள்ளை தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள இத்திருவிழா தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

திருநாள் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுப்பார்கள் என மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ் பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை, திருவிழாக் காலங்களில் மடுப்பிரதேசங்களினுள் பயணிக்கும் பக்தர் கள் களியாட்ட நிகழ்வுகளை குறைக்குமாறும் மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ் பிள்ளை மேலும் தெரிவித்தார்.

# இங்குள்ள தமிழர்களுக்கும் நல்லிணக்கத்துக்கும் பாதகமாக செயற்படும் வெளிநாட்டுத் தமிழர்கள்!

**இதே புலம்பெயர் தமிழர்கள்தான் மகிந்த ராஜபக்ஷவை இனவெறியர் என்றும் இனச் சங்காரத்தில் ஈடுபட்டதாகவும் கூறுகிறார்கள். தாம் கூறுவதை அவர்களே நம்புவதாக இருந்தால் அதே ராஜபக்ஷவை ஆத்திரமூட்டுவதால் இலங்கையில் வாழும் தமிழர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு அவர்களுக்கு இருக்கும் உத்தரவாதம் என்ன?**

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து

நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளிலும் நடைபெற்றுவரும் அனைத்து சம்பவங்களும் இலங்கையில் சமூகங்களுக்கிடையே ஏற்பட வேண்டிய நல்லிணக்கத்திற்கு முரணாகவே நடைபெற்றுவருகின்றன. நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசுவோரும் இதற்கு விதிவிலக்காக நடந்துகொண்டதாக தெரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் 14ஆவது சம்மேளனத்தின்போது அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரைஅவற்றில் முக்கிய நிகழ்வாகும். அவ்வுரை சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வெறுப்பையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகளும் ஒருவித ஏமாற்றத்துடனேயே அவ்வுரையை நோக்குகிறார்கள்.

மற்றொரு சம்பவம் லண்டன் நகரில் இடம்பெற்றது. எலிசபெத் மகாராணியாரின் வைர விழாவில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்குச்சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு பொதுநலவாய வர்த்தக பேரவையில் ஆற்றவிருந்த உரை லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக இரத்துச் செய்ய வேண்டிய நிலையேற்பட்டது. எனவே நிகழ்வின் அமைப்பாளர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் கௌரவத்தை பாதுகாப்பதற்காக அவ்வுரை மட்டுமன்றி அன்றைய காலை அமர்வையே இரத்துச் செய்தனர்.

உத்தியோகபூர்வ அழைப்பொன்றின் பேரில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர் என்ற முறையில் அங்கு சென்ற அமைச்சர் ரெஜினோல்ட் குரேக்கு தமிழ்நாட்டிலுள்ள புலி இயக்க ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அவர் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மூன்று முறை கேட்டுக் கொண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தேசியக் கொடியை உயர்த்த மறுத்ததாக செய்தியொன்று வெளியாகியுள்ளது.

இவை அனைத்தையும் நியாயப்படுத்த எவ்வளவோ காரணங்களை எடுத்துக் காட்டலாம். ஆனால் ஒன்றை மட்டும் எவராலும் மறுக்க முடியாது. இவை அனைத்தும் நல்லிணக்கத்திற்கு சாதகமானவையல்ல, பாதகமானவை என்பதே அந்த விடயமாகும்.

தமிழ்நாட்டிலும் லண்டனிலும் இடம்பெற்ற சம்பவங்கள் முதன் முறையாக அவ்விடங்களில் இடம் பெற்றவையல்ல. இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் அவ்விரண்டு இடங்களிலும் இடம்பெற்றுள்ளன.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதி லண்டனில் ஒக்ஸ்பர்ட் யூனியனில் விசேட உரையொன்றை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டிருந்தார். அவர் அங்கு சென்று அதற்காக தயாராகவிருந்த நிலையில் ஒக்ஸ்பர்ட் யூனியன் அதிகாரிகள் திடீரென அவரது உரையை இரத்துச் செய்தனர். இதற்கும் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் லண்டனில் நடத்திய ஆர்ப்பாட்டங்களே காரணமாகியது.

இது நிச்சயமாக ஜனாதிபதியை பெரும் அசௌகரியத்திற்குள்ளாக்கியிருக்கும். ஜனாதிபதியை மட்டுமன்றி ஒக்ஸ்பர்ட் யூனியனில் அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள். அந்த நிகழ்வு ஜனாதிபதியின் மனதில் பெரும் ஆத்திரத்தையும் ஊட்டியிருக்கும்.

இந்த நிலையில் தான் மகாராணியாரின் வைர விழாவில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்ற ஜனாதிபதிக்கு பொதுநலவாய வர்த்தக பேரவையின் பிரதான உரையை நிகழ்த்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனவே அவ்வாறானதோர் உரையை இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கக்கூடிய சூழ்நிலை லண் டனில் இருக்கிறதா என்பதை அதன் அமைப்பாளர்கள் முன்கூட்டியே ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களும் இதேபோல் தவிர்த்திருக்கக் கூடியவையே. அமைச்சர் ரெஜினோல்ட் குரே திருப்பி அனுப்பப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் எதிர்ப்புக்குள்ளனார். ஜனாதிபதியின் உறவினரான பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவும் அவரது கணவரும் வழிபாட்டுக்காக தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தபோது நையப்புடைக்கப்பட்டனர்.

இத்தனையும் நடந்து இருக்கையில் தமிழ்நாட்டவர்களே இலங்கை பிரமுகர்களை பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக அழைக்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகளை தவிர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே அவர்கள் அவ்வாறு இந்த பிரமுகர்களை அழைத்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்ப்புகள் வந்தாலும் தமது அழைப்பை ஏற்று வந்த பிரமுகர்கள் அசௌகரியத்திற்குள்ளாகாத வகையில் நிகழ்ச்சியை நடத்த வேண்டும்.

ஏனெனெனில் ஒரு சிலருக்கு இது போன்ற சம்பவங்கள் திருப்தியை அளித்தாலும் இவை உள்நாட்டில் தமிழர்களின் நிம்மதியை கெடுக்கக்கூடும். அமைச்சர் குரே திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினரான ஜோன் அமரதுங்க நிலைமை தொடர்ந்தால் தமிழ்நாட்டில் இருந்து வருவோரை நாமும் இவ்வாறே உபசரிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இது பாரதூரமான கூற்றாகும். மறுபுறத்தில் இவ்வாறு கூறியிருப்பது இனவாத கட்சியொன்றின் உறுப்பினர் ஒருவர் அல்ல. ஐ.தே.க.வை சேர்ந்த கத்தோலிக்க உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கூறியிருக்கிறார். அதனை எதிர்த்து எவரும் கருத்து வெளியிட்டதாகவும் தெரியவில்லை. தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் அதனை எதிர்த்து கருத்து வெளியிடுவது கஷ்டமாக இருந்திருக்கும்.

அவர் கூறியதைப் போல் எதிர்காலத்தில் தமிழ்நாட்டவர்களுக்கு இலங்கையில் வைத்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு அதன் மூலம் மோசமான நிலைமை நாட்டில் ஏற்பட்டால் அதனால் பாதிக்கப்படப் போவது தமிழ்நாட்டவர்கள் அல்ல. தமிழ்நாட்டு தலைவர்களுக்கு தமிழ் உணர்வுகளை தூண்டி அடுத்தடுத்து வரும் தேர்தல்களில் வாக்கு வேட்டையில் ஈடுபட அவ்வாறான நிலைமைகள் உதவுமேயல்லாமல் வேறு பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை.

லண்டனில் இடம்பெற்ற சம்பவங்கள் ஒரு வகையில் இதை விட பாரதூரமாகும். இதே புலம்பெயர் தமிழர்கள் தான் மகிந்த ராஜபக்ஷவை இனவெறியர் என்றும் இனச் சங்காரத்தில் ஈடுபட்டதாகவும் கூறுகிறார்கள். தாம் கூறுவதை அவர்களே நம்புவதாக இருந்தால் அதே ராஜபக்ஷவை ஆத்திரமூட்டுவதால் இலங்கையில் வாழும் தமிழர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு அவர்களுக்கு இருக்கும் உத்தரவாதம் என்ன? அவ்வாறான பதற்ற நிலைமை ஏற்பட்டால் அது ஏனைய சிறுபான்மை மக்களையும் பாதிக்காது என்பதற்கும் உத்தரவாதம் இல்லை.



**தமிழ்நாட்டு தலைவர்களுக்கு தமிழ் உணர்வுகளைத் தூண்டி அடுத்தடுத்து வரும் தேர்தல்களில் வாக்கு வேட்டையில் ஈடுபட அவ்வாறான நிலைமைகள் உதவுமேயல்லாமல் வேறு பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை.**

அப்படியென்றால் இலங்கைத் தலைவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே கூடாதா என ஒருவர் கேட்கலாம். அது நியாயமான கேள்வியே. போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகளுக்கு சர்வதேச சமூகம் அரச படைகளையும் புலிகளையும் குற்றஞ்சாட்டுகிறது. ஆனால் புலிகளின் எஞ்சியுள்ள தலைவர்களைப் போலவே இலங்கையில் அரச தலைவர்களும் போரின் அந்நிகழ்வுகளுக்கு பொறுப்புக் கூற தயாராக இருப்பதாக தெரியவில்லை. போர் முடிவடைந்து மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் அரச தலைவர்கள் உருப்படியான எதனையும் செய்வதாக தெரியவில்லை.

எனவே தமிழர்களும் அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் நியாயம் இருக்கத் தான் செய்கிறது. அவர்கள் நியாயம் கோரி அரசாங்கத்தை வற்புறுத்தத் தான் வேண்டும். ஆனால் எந்த மக்கள் சார்பில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களோ அதே மக்களை அந்நடவடிக்கைகள் பாதிக்கக் கூடாது என்பதில் சர்ச்சை இருக்க முடியாது.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விடுத்த செய்தி இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அவரது உரையில் பல சர்ச்சைக்குரிய விடயங்கள் இருந்தபோதிலும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அவர் விடுத்த அச்செய்தி விவேகமும் முதிர்ச்சியும் கொண்டதாகவே தெரிகிறது.

"இலங்கைத் தீவிற்கு வெளியில் வாழும் தமிழர்கள், தீவிற்கு உள்ளே வாழும் தமிழர்களுக்காக எடுக்கும் அனைத்து அரசியல் முன்னெடுப்புக்களும் பகிரங்கமாக வெளியிடும் கருத்துக்களும் இங்குள்ள களநிலைக்குப் பாதகத்தை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும். இங்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறுகளை விளைவிக்காதவையாக அமைய வேண்டும்.

ஏனென்றால் - இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, இங்குள்ள சூழ்நிலையை அனுசரித்து, இங்கேயே வாழும் மக்களால், இங்கேயே எடுக்கப்படும் முயற்சிகள் தான் உருப்படியான இறுதி விளைவுகளை ஒட்டுமொத்தமான தமிழ் தேசிய இனத்தின் மீதும் ஏற்படுத்தும்" இவ்வாறு சம்பந்தன் கூறியிருக்கிறார்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் எந்தெந்த செயற்பாடுகள் உள்நாட்டு மக்களை மோசமாக பாதிக்கும் என்பதை முன்கூட்டியே கூறுவது கடினமாகும். ஆனால் வெளிநாட்டு தமிழர்கள் தமது நடவடிக்கைகளை தீர்மானித்துக் கொள்வதற்கு முன்னர் இலங்கையில் வாழும் தமிழ் தலைவர்களோடு கலந்துரையாடினால் மோசமான நிலைமைகளை தவிர்த்துக்கொள்ள கூடுதலான வாய்ப்புக்கள் ஏற்படும்.



# புலம்பெயர்ந்துள்ள தமிழர்களின் அச்சுறுத்தலுக்கு அடிபணிய முடியாது

(கொழும்பு)

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்கு அடிபணிவதா என்று சிந்திக்கவேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதுகெலும்புடன் செயற்பட்டு வருகிறார். நாமும் அப்படித்தான் செயற்படுகிறோம். நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை.

இவ்வாறு ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் புலிகள் கொடுத்துவரும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிவதா என்ற கேள்வி எம்முன் எழுந்துள்ளது. அதனை உடனடியாகத் தீர்மானிக்கவேண்டிய வேளை வந்துவிட்டது. ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷ இலண்டன் சென்றபோது புலம்பெயர் புலிகள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் நீதியான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவில்லை.

ஜனாதிபதிக்கும், இலங்கைக்கும் எதிராக நடத்தப்பட்ட இவ்வாறான எதிர்ப்புச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் பிரித்தானிய அரசுக்கு எதிராகவும் வரலாம். இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் உள்ள பயங்கரமான நிலைமையை பிரித்தானிய பாதுகாப்புத் துறையினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அவரை எவராலும் கட்டுப்படுத்த முடியாது. மூன்று தசாப்தகால யுத்தத்தை நிறைவுசெய்துவிட்டு நாம் அடுத்தகட்ட செயற்பாடுகளுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கையில், நாங்கள் ஏன் பயப்படவேண்டும்?

புலம்பெயர் புலிகளுக்குத் தலைவணங்குவதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதி மகிந்த முதுகெலும்போடு செயற்படுகின்றார். நாங்களும் அப்படியே செயற்படுகின்றோம். எவருக்கும் அச்சப்படப்போவதில்லை என்றார்.

## உயர்தரப் பெறுபேறு மீளாய்வு நிறைவு


(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் மீளாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜீ.புஷ்பகுமார குறிப்பிட்டார்.

சட்ட மா அதிபர் ஆலோசனையின் பிரகாரம் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

## புதிய திருப்பத்தை நோக்கி சீன உறவு அமையவேண்டும்



(கொழும்பு)

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு புதியதொரு திருப்பத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மிகநெருங்கிய நட்புநாடாக சீனா விளங்கிவரும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் சீன ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி உதவிகள் ஒரு சில பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது என்றார்.

சீன கம்யூனிஸ்ட கட்சியின் அழைப்பை ஏற்று அங்கு சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் நாளை வரை சீனாவில் தங்கியிருப்பார்.

## 208 பொருட்கள் இறக்குமதி விரைவில் சட்டத் திருத்தம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து செய்யப்படும் இறக்குமதிகளை வரையறை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் திருத்தங்களை செய்வதன் மூலம் இந்திய இறக்குமதிகளைக் குறைக்க முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்திய இறக்குமதிகளை வரையறுப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களை மேலும் ஊக்கப்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

208 பொருட்கள் இறக்குமதி செய்வது தொடர்பிலான சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. இதில் அநேகமான பொருட்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர் பால்மா, சவர பிளேட், கத்திகள், கரண்டிகள் உள்ளிட்ட பல்வேறுபொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பிலான சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

தெற்காசிய பிராந்திய வலயத்தின் பல நாடுகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை பயன்படுத்திக் கொண்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்திய இறக்குமதிகளை வரையறுப்பது தொடர்பில் ஏற்படக்கூடிய சாதக பாதக விளைவுகளை கருத்திற் கொண்டு, அடுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

## 18 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து மாலைதீவுப் பிரஜை மரணம்

(கொழும்பு)

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலின் 18 ஆவது மாடியிலிருந்து விழுந்து மாலைதீவு பிரஜை ஒருவர் மரணமாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. மரணம் குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு பிரஜை தற்கொலை செய்து கொண்டாரா? தவறி விழுந்தாரா? திடீர் விபத்தா? இவரை யாராவது கொலை செய்தார்களா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்த மாலைத்தீவு பிரஜை தங்கியிருந்த விடுதியில் மேலும் சில மாலைதீவு பிரஜைகள் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹோட்டலில் தங்கியிருந்த இவர்களைப் பார்ப்பதற்கு நேற்றுமுன்தினம் இரவு இரு ரஷ்ய நாட்டுப் பெண்களும் இலங்கைப் பெண்ணும் வந்து சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சர்வதேச சமாதான சுட்டியில் இலங்கைக்கு 103 ஆவது இடம்

(கொழும்பு)

இலங்கைத்தீவில் இனநல்லிணக்கம் என சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச அரங்கில் முழங்கி வரும் நிலையில் பொருளியல் மற்றும் சமாதானத்துக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்ட 2012 சர்வதேச சமாதான சுட்டியில் இலங்கை 103 ஆவது இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளது.

158 நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

சர்வதேச சமாதானச் சுட்டியானது பொருளியல் வல்லுநர்கள் மற்றும் சமாதானம் தொடர்பான கற்கை நெறிகளில் சர்வதேச தரத்திலான தேர்ச்சிபெற்றவர்களால் தயாரிக்கப்பட்டு பொருளியல் மற்றும் சமாதானத்துக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டு வருகின்றது.

இவ்வறிக்கையினை முன்னாள் ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகாட்டர், திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா, பேராசிரியர் ஜோசப் ஸ்டிக்லிட்டஸ், முன்னாள் தென்னா பிரிக்க சர்வதேச பிரமுகர்களால் அங்கீகரிப்பட்டது.

இவ்வறிக்கையின் பிரகாரம் முதலாவது இடத்தை ஐஸ்லாந்தும் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே டென்மார்க் மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளும் பெற்றுள்ளன.

சனத்தொகை அதிகளவில் காணப்படும் நாடான சீனா 89 ஆவது இடத்தினையும், அமெரிக்கா 88 ஆவது இடத்தினையும், பிரிட்டன் 29 ஆவது இடத்தினையும் பிடித்துள்ளன.

சமாதானத்தின் அடிப்படையில் வெளிவந்துள்ள இவ்வறிக்கையில் சார்க் பிராந்திய நாடுகளின் அடிப்படையைக் கொண்டு பார்க்கும் போது பூட்டான் 19 ஆவது இடமுன்னணியில் இருக்கின்றது.

சர்வதேச சமாதானச் சுட்டியானது நோபல் விருது பெற்றவர்கள் பொருளியலாளர்கள், கல்விமான்கள், மனிதாபிமானிகள், அரசியல்வாதிகள் மற்றும் புலமை பெற்றவர்கள் உட்பட உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் அறிக்கையாகும்.

## ரயில் மூலம் கொழும்பு செல்லும் தமிழர்களிடம் பணம் பறிப்பு

(கொழும்பு)



வட பகுதியிலிருந்து ரயில் மூலம் கொழும்பிற்கு பிரயாணம் மேற்கொள்ளும் தமிழர்களை அச்சுறுத்தி, பணத்தைக் கொள்ளையிட்ட ஒருவர் கைது செய்யப்படடுள்ளார். தான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்து, ரயிலில் வருகைதரும் நபர்களிடம் அடையாள அட்டைகளைச் சோதனையிடும் போர்வையில், சந்தேக நபர் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ரயில்வே பாதுகாப்புப் பிரிவின் ஒத்துழைப்புடன் கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட நபர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்று கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பணிப் பகிஷ்கரிப்பால் அறுபது கோடி நட்டம்

தங்களது பணிப் பகிஷ்கரிப்பின் காரணமாக அரசாங்கம் இதுவரை 60 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ஆர்.எம்.சநதிரபால தெரிவித்தார்.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் வரை பணிப்பகிஷ்கரிப்பை கைவிடப்போவதில்லை எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

எனினும், பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு வழங்கப்பட்டுள்ள போதும, அரச பணத்தை வீணடிக்கும் வகையில் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என உயர் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# படைப்பாளியின் எழுத்தாற்றலே புலமைத்துவத்தை தீர்மானிக்கும்

– கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் சி.ஜெயசங்கர் –

(தெல்லிப்பழை)

படைப்பில் எழுதப்படுகின்ற விடயங்கள்தான் படைப்பாளியின் புலமைத்துவத்தையும், படைப்பின் ஆளுமைத் தன்மை, ஆற்றல் என்பவற்றைத் தீர்மானிக்கின்றது. அத்தகைய படைப்புக்களே சமூகத்தில் உயர் நிலையையும் அடைகின்றது என கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத்துறைத் தலைவர் சி.ஜெய சங்கர் தெரிவித்தார்.

குழந்தைக்கவிஞரான மயிலங்கூடல் பி.நடராசனின் "ஈழத் தமிழர் தொன்மையும் வழக்காறுகளும்" என்னும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த 10 ஆம் திகதி இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்ற போது நூல் அறிமுகவுரையை வழங்குகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இன்றைய இளையதலைமுறையினர் கலை இலக்கிய விழுமியங்கள் பற்றிக் கதைப்பதில்லை. அவர்களுக்கு நேரமும் இல்லை. ஆனால் மூத்த படைப்பாளிகளுடனோ, புலமைத்துவம் மிக்கவர்களுடனோ நாம் கதைக்கின்ற போது அவர்களிடமிருந்து நிறைய விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் பிறரது நூல் வெளிவரவேண்டும் என்று உழைத்த ஒரு மூத்த பரம்பரை எம்முடன் இருக்கின்றது. பிறருக்காக உழைத்த இவர்களின் படைப்புக்கள் பல இன்னமும் நூலுருப் பெறாமல் உள்ளன.

அத்தகையவர்களில் முதன்மையானவரான மயிலங்கூடலூர் பி.நடராஜனின் நூலையே எமது தந்தையார் நினைவாக வெளியிட்டு வைக்கின்றோம் எனத் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையுரை யையும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆய்வுரையையும் வழங்கினர். இந்நிகழ்வில் கல்வியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (44)

## கூலியாட்களுக்கு பற்றாக்குறை

(அரியாலை)

மண்டைதீவுப் பிரதேசத்தில் தென்னை மரங்களில் ஏறி தேங்காய் பறிப்பதற்கு ஆள் பற்றாக் குறையாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இத்தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் வேறு தொழிலுக்கு சென்று விடுவதாலேயே இத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், குறிப்பாக தீவகத்தில் தேங்காய் விலை மிகவும் குறைந்துள்ளதால் தென்னை மர உரிமையாளர்கள் கூடிய கூலிகொடுத்து தேங்காய் பறிப்பது இயலாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர். (23)



காரைநகர் - கிழவன் காடு கலாமன்றம் நடத்திய் கலைவிழாவும், பரிசில் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப்பணிப்பபாளர் ப.விக்கினேஸ்வரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (50)

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு அளவையியல் பாடக் கருத்தரங்கு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அளவையியல் பாடத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும், அப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு யாழ்.மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதுடன், இக்கருத்தரங்கில் கிழக்குப் பல்கலைக்கழக மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.ரவி கருத்துரை வழங்கவுள்ளார்.

அளவையியல் பாடத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பயனிலைத் தருக்கம், தர்க்கப் படலை, உண்மை விருட்சம் முதலான அலகுகளில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதால், மாணவர்களையும், ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (06)

## "சிறகு விரிக்காத பறவைகள்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய பார்வையற்றோர் சம்மேளன அங்கத்தவர் கலாபூசணம் நாவற்குழி சு.சிவராஜாவின் "சிறகு விரிக்காத பறவைகள்" என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி வீதியில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் போராசிரியர் என்.சண்முகலிங்கன், நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியற் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வழங்கவுள்ளனர். நூலின முதற் பிரதியை யாழ்.பல்கலைக் கழக நூலகர் செல்வி எஸ்.அருளானந்தம் பெறவுள்ளார்.

## வலய மட்டத்தில் இரண்டாம் தவணை

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை வலய மட்டத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள்கள் தயாரிக்கப்படவுள்ளதால், மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் 18 ஆம் திக்திக்கு முன்பாக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## காரைநகரில் கணினி வகுப்பு

(யாழ்.நிருபர்)

காரைநகர் - யாழ்ரன் கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு விசேட கணனி, ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கனடா காரைநகர் கலாசார மன்றமும், இலண்டன் காரைநகர நலன்புரிச் சங்கமும் இம் மேலதிக விசேட வகுப்புக்களுக்கான நிதி உதவியினை வழங்கியுள்ளன. மேற்படி விசேட கணினி, ஆங்கில வகுபபுக்களில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்வதாக அதிபர் வே.முருகமூர்த்தி தெரிவித்துள்ளார். (10)

## முரசின் இன்றைய பலன்

(15.06.2012 –வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 01 ஆம் திகதி. ஏகாதசி பிற்பகல் 1.39 வரை. நட்சத்திரம் அச்சுவினி. பிற்பகல் 3.20 மணி வரை. அமிர்தசித்தம், கரி நாள், ஏகாதசி விரதம். இராகுகாலம் 10.23 - 11.53 வரை. சுபநேரம் 5.53 - 7.23 வரை. எமகண்டம் 2.53 - 4.23 வரை. குளிகைகாலம் 7.23 - 8.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஸ்திரிகளால் நன்மை, நிதானத்துடன் நடக்கவும், உறவினரை அனுசரிக்கவும், சுப காரியம். |
| ரிஷபம் | குடும்பத்தில் உற்சாகம், நீண்டகாலக் கனவுகள் நனவாகும், தொழிலில் மந்த நிலை, செலவு. |
| மிதுனம் | சகோதரர் உதவி, வீண்பழி கேட்க நேரிடும், நிதானம் அவசியம், பொன் பொருள் சேரும். |
| கடகம் | தொழில் வெற்றி, எதிர்பாராத உதவி கிட்டும், முதலீடுகளில் கவனம், குடும்பத்தில் சுபீட்சம். |
| சிம்மம் | முயற்சிகளில் வெற்றி, சரளமான கொடுக்கல் வாங்கல், தெய்வீக பயணம், மனதில் நிம்மதி. |
| கன்னி | கவனம் தேவை, உணவில் கவனம், தடை தாண்டி திருமணம், விட்டுக்கொடுத்துப்போ. |
| துலாம் | கீர்த்தி உண்டாகும், பிரச்சினைகளைத் தவிர்கவும், மன உழைச்சல், கை நழுவும் சொத்து. |
| விருச்சிகம் | புது முயற்சி, கூட்டுத் தொழிலில் நன்மை, மன மகிழ்ச்சி, குடும்ப ஒற்றுமை அதிகரிப்பு. |
| தனுசு | மனதில் சலிப்பு, சுபகாரியங்களுக்கு குறைவில்லை, உற்றார் உறவினர் ஆதரவு. |
| மகரம் | சகோதரர் உதவி, வெளிநாட்டுத் தொடர்பு, தூரதேச பயணம், சுபகாரியத்தடை. |
| கும்பம் | வாக்கு நலம, சுறுசுறுப்பும் உற்சாகமும், வாழ்க்கையாளர்கள் ஆதரவு, அதிகாரிகள் ஆதரவு. |
| மீனம் | குடும்ப சுகம், கடன் அதிகரிக்கும், அதிகாரிகள் கடுப்பாக இருப்பர், நண்பர்கள் அனுகூலம்.. |

# சந்நிதியான் ஆலய சூழலில் உள்ள உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலும், வீதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்ற உணவகங்களிலும், தேநீர்க்கடைகளிலும் சுத்தம் பேணப்படுவதில்லை என ஆலயத்திற்கு வருகை தருகின்ற பொதுமக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான உணவகங்களில் அழுக்கடைந்த கோப்பைகளிலும், குவளைகளிலும் உணவு மற்றும் பானவகைகள் பரிமாறப்படுவதும், திறந்த நிலையில் உணவுப் பொருட்களை வைத்திருப்பதாலும், ஈக்களின் தொல்லைகளால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயங்கள் ஏற்படலாம் எனப் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆலய வீதிகளில் உள்ள உணவகங்களில் சுத்தம் பேணப்படாமையால் வெளியிடங்களில் இருந்து வருகின்ற பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அந்தப் பிரதேசத்தின் நகராட்சி மன்றத்தினூடாகப் பொதுச் சுகாதார பரிசோதகர் எவரும் சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்படாத நிலையில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஆலய நிர்வாகிகளும் ஆலயச் சூழலின் தூய்மையைப் பேணுவதில் கவனம் செலுத்துவதில்லை எனவும், ஆலயத்தைச் சூழ பல அன்னதான மடங்கள் இருந்தபோதும், ஆலயத்தின் உள் வீதியில் உள்ள பூங்காவன மண்டபத்தில் தினமும் அன்னதானம் வழங்குவதால், அவற்றை உண்ணவருபவர்கள் சாப்பிட்ட இலைகளை அப்படியே வீசி விட்டுச் செல்வதால் ஆலயத்தின் புனிதத தன்மை பேணப்பட முடியாதுள்ளதாகவும் பொது அமைப்புக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# ஜேர்மன், போர்த்துக்கல் அணிகள் யூரோ கால்பந்தில் வெற்றி

(லிவிவ்)

யூரோக் கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்களில் போத்துக்கல், ஜேர்மனி அணிகள் வெற்றிபெற்றன. அத்துடன் நெதர்லாந்து அணி முதல் அணியாக தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

யூரோ கோப்பை கால்பந்து தொடரின் விறுவிறுப்பான லீக் போட்டியில் போர்த்துக்கல் அணி, டென்மார்க்கை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஆட்டம் முடிய சில நிமிடங்கள் இருக்கும் போது வரேலா அடித்த சூப்பர் கோல், போர்த்துக்கலின் வெற்றிக்கு கைகொடுத்தது. நேற்று முன்தினம் லிவிவ்வில் (உக்ரைன்) நடந்த பி பிரிவு லீக் போட்டியில் போர்த்துக்கல், டென்மார்க் அணிகள் மோதின. கடந்த போட்டியில் ஜேர்மனியிடம் வீழ்ந்த போர்த்துக்கல் அணி, இம்முறை கட்டாய வெற்றியை எதிர்நோக்கி களமிறங்கியது.

முதல் பாதியில் போர்த்துக்கல் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் பெப்பி தலையால் முட்டி ஒரு அருமையான கோல் அடிக்க, முன்னிலை பெற்றது. தொடர்ந்து 36ஆவது நிமிடத்தில் நானி கொடுத்த பாசை பெற்ற போர்த்துக்கல் வீரர் போஸ்டிகா அப்படியே ஒரு கோல் அடித்து அசத்தினார். இதற்கு 41ஆவது நிமிடத்தில் டென்மார்க் அணியின் பெண்ட்னர் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவில் போர்த்துக்கல் 2-1 என்ற முன்னிலை பெற்று இருந்தது.

இரண்டாவது பாதியில் டென்மார்க் அணியினர் துடிப்பாக ஆடினர். ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் மீண்டும் பெண்ட்னர் தலையால் முட்டி ஒரு கோல் அடிக்க, போட்டி 2-2 என சமநிலையை எட்டியது. 84வது நிமிடத்தில் போர்ச்சுகல் அணியில் மெரிலசுக்கு பதிலாக சில்வஸ்டர் வரேலா களமிறக்கப்பட்டார். இந்த மாற்றத்திற்கு நல்ல பலன் கிடைத்தது. 87வது நிமிடத்தில் வரேலா ஒரு கலக்கல் கோல் அடிக்க, போர்ச்சுகல் அணி 3-2 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 புள்ளிகளை முழுமையாகப் பெற்றது.

இதேவேளை, பி பிரிவு லீக் ஆட்டத்தில் 3 முறை சாம்பியனான ஜேர்மனி அணி, நெதர்லாந்தை எதிர்கொண்டது. ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் ஜேர்மனி அணியின் மேரியோ கோமெஸ் கோல் அடித்தார். ஆட்டத்தின் பெரும்பாலான நேரங்களில் பந்து ஜேர்மனி அணியினரின் வசமே இருந்தது. இதனால் ஜேர்மனி வீரர்களை கோல் அடிக்க விடாமல் தடுப்பதே, நெதர்லாந்து அணியினருக்கு பெரும்பாடாகி விட்டது. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட கோமெஸ், நெதர்லாந்து




வீரர்களிடமிருந்து மிக நேர்த்தியாக பந்தைக் கடத்தினார். இதன்பலனாக 38ஆவது நிமிடத்தில் கோமெஸ் இரண்டாவது கோல் அடித்தார். இரண்டாவது பாதியில் எப்படியாவது கோல் அடிக்க வேண்டுமென நெதர்லாந்து அணியினர் மிகவும் போராடினர். அவர்களது தீராத முயற்சியின் பலனாக ஆட்டத்தின் 74-வது நிமிடத்தில் நெதர்லாந்தின் ராபின் வான் பெர்ஸி தனி ஆளாக பந்தை நீண்ட தூரம் கடத்திச்சென்று கோல் அடித்தார். அதன்பிறகு கோல் அடிப்பதற்கு இரு அணியினரும் மேற்கொண்ட முயற்சிகள் இறுதிவரை பலிக்கவில்லை. இறுதியில் ஜேர்மனி அணி 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தியது.

ஏற்கனவே தனது முதல் ஆட்டத்தில் டென்மார்க்கிடம் தோற்ற நெதர்லாந்து அணி, முதல் அணியாக தொடரிலிருந்து வெளியேறுகிறது. தான் ஆடிய இரு ஆட்டங்களிலும் வென்றுள்ள ஜேர்மனி அணி பி பிரிவில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

## இங்கிலாந்துடன் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(ஜோகன்னஸ்பர்க்)

இங்கிலாந்து அணியுடன் டெஸ்ட் தொடரில் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இங்கிலாந்து செல்லும் தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 3 ருவென்ரி - 20 போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலில் டெஸ்ட் தொடர் நடக்கிறது. இந்த தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் நியூசிலாந்துடன் நடந்த டெஸ்ட் தொடரில் விளையாடிய அதே வீரர்கள் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

டெஸ்ட் தரவரிசையில் முதல் 2 இடங்களில் இருக்கும் அணிகள் மோதும் இந்த தொடர் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. முதல் டெஸ்ட் ஓவல் மைதானத்தில் ஜுலை 19ஆம் திகதி தொடங்குகிறது. தென்னபிரிக்க அணி: கிரேம் ஸ்மித் (கப்டன்), ஹசிம் அம்லா, மார்க் பவுச்சர், மெர்ச்சன்ட் டி லாங்கே, டி வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, இம்ரான் தாஹிர், ஜக் கலிஸ், மார்னி மார்க்கல், அல்விரோ பீட்டர்சன், ரொபின் பீட்டர்சன், வெர்னான் பிலேண்டர், ஜாக் ருடால்ப், டேல் ஸ்டெயின், லான்வபோ சோட்சோபி

# காலத்துடன் பொருந்தாத இங்கிலாந்து ருவென்ரி - 20

(கொழும்பு)

இங்கிலாந்தின் ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டி முறைமை காலத்திற்கு பொருந்தாது என இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் இந்தியன் பிறிமியர் லீக் தொடர் போன்று நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு இங்கிலாந்து ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரை ஆரம்பித்த போது, அது புதுமையான ஒன்றாக இருந்ததாகவும் முரளிதரன் கூறியுள்ளார். எனினும் உலகளாவிய ரீதியில் இவ்வாறான போட்டிகளுக்கு சவாலாக கிரிக்கெட் தொடர்கள் நடத்தப்படுவதால், இங்கிலாந்து ருவென்ரி - 20 போட்டிகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் போட்டிகளின் முறைமை மாற்றப்படுமாயின் இங்கிலாந்தில் அதற்கு பெரும் வரவேற்பு கிடைக்கும் என கூறியுள்ள முரளிதரன், தொலைகாட்சி உரிமமும் கிடைக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

40 வயதான முத்தையா முரளிதரன், சென்னை சுப்பர் கிங்ஸ், ரோயல் சலஞ்ஜஸ் பெங்களூர், கொச்சி ரைஸ்கஸ், சிட்டகொங் கிங்ஸ், இலங்கையின் மலையக அணி, லங்கஷெசெயர் மற்றும் வெலிங்டன் ஆகிய அணிகளுக்காக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்.இற்கு சிறப்புச்சலுகை நிராகரித்தது ஐ.சி.சி.

சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில்,ஐ.பி.எல். ருவென்ரி - 20 போட்டித் தொடருக்கு சிறப்பு சலுகை வழங்க முடியாது என ஐ. சி. சி. அறிவித்துள்ளது. இந்தியன் பிரிமியர் லீக் ருவென்ரி - 20 போட்டித் தொடரை இந்திய கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர். இந்த தொடர் 2 மாத காலம் நடப்பதால், வெளிநாட்டு வீரர்கள் தங்கள் தேசிய அணி விளையாடும் போட்டிகளில் பங்கேற்பதற்காக பாதியில் திரும்ப நேரிடுகிறது. சில வீரர்கள் பணம்தான் முக்கியம் என்று தேசிய அணிக்காக விளையாடாமல் ஐ.பி.எல். போட்டியில் மட்டுமே கவனம் செலுத்தவும் நினைக்கிறார்கள். இதை தவிர்ப்பதற்காக, ஐ.பி.எல். போட்டி நடக்கும் சமயத்தில் வேறு எந்த நாட்டிலும் கிரிக்கெட் போட்டி நடக்காமல் இருக்கும் வகையில் சர்வதேச கிரிக்கெட் அட்டவணை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்தது.

இந்நிலையில், ஐ.சி.சி. தலைமை செயலதிகாரி ஹாரூன் லார்கட் இது குறித்து கூறியதாவது: ஐ.பி.எல். போட்டிக்கு மட்டும் சிறப்பு சலுகை வழங்குவது மிகவும் அபாயகரமான முன்னுதாரணமாக அமைந்துவிடும். தனியார் போட்டிக்கு அப்படி சலுகை வழங்க வாய்ப்பே இல்லை. அப்படி செய்தால், அவுஸ்ரேலியாவில் பிக் பாஸ் ரிவென்ரி - 20, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் நடக்கும் உள்ளூர் ருவென்ரி -20 போட்டிகள் என்று எல்லா போட்டிக்கும் சலுகை வழங்க வேண்டியிருக்கும் இவ்வாறு ஹாரூன் லார்கட் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய அணிக்கு ஷரபோவா தலைமை

(மொஸ்கோ)



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள ரஷ்ய அணிக்கு, பிரபல ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவ தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடக்க விழா அணிவகுப்பு நிகழ்ச்சியில் தேசியக் கொடியை ஏந்தி அணியை வழிநடத்தும் கௌரவம் ஷரபோவாவுக்கு கிடைத்துள்ளது. சுவிட்சர்லாந்து அணிக்கு ரோஜர் பெடரர், ஸ்பெயின் அணிக்கு ரபேல் நடால் தலைமை வகிக்க உள்ள நிலையில், ரஷ்ய அணிக்கு ஷரபோவா தலைமையேற்பது ரென்னிஸ் விளையாட்டின் புகழ் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை காட்டுவதாக ரஷ்ய ரென்னிஸ் சங்கத் தலைவர் ஷமிள் டார்பிஸ்சேவ் கூறியுள்ளார். ரஷ்யாவில் பிறந்த ஷரபோவா தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தாலும், ரஷ்ய இரசிகர்கள் அவர் மீது மிகுந்த அபி மானம் வைத்துள்ளனர் என்றும் டார்பிஸ்சேவ் தெரிவித்தார்.

ரஷ்ய அணிக்குத் தலைமை தாங்குவது எனக்குக் கிடைத்த கௌரவமாகவே பார்க்கின்றேன். ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல முயற்சிப்பேன் என ஷரபோவா தெரிவித்தார்.

# வன்முறைகளுக்கு மத்தியிலும் சூடுபிடிக்கும் யூரோ கால்பந்து



(வார்சா)

யூரோ கோப்பை கால்பந்து தொடரில், ரஷ்யா, போலந்து இரசிகர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு, ரப்பர் குண்டுகளை கொண்டு துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 15 பேர் காயமடைந்தனர். 130 பேர் கைது செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், ரஷ்யா - போலந்து இடையிலான உறவு மிக மோசமாக உள்ளது. அண்டை நாடுகளாக இருந்தாலும், இந்தியா, பாகிஸ்தான் இரசிகர்கள் போலத்தான் அவ்வப்போது மோதிக்கொள்வர்.

ரஷ்யா, போலந்து அணிகள் பங்கேற்ற, யூரோ கோப்பை லீக் போட்டி வார்சா நகரில் நடந்தது. இப்போட்டி துவங்கும் முன், மைதானத்துக்கு செல்லும் வழியில் விஸ்டுலா ஆற்றுப்பகுதியில், போலந்து இரசிகர்கள் சிலர், ரஷ்யாவை குறித்து மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி பாட்டு பாடினர். சிலர், ரஷ்ய எதிர்ப்பு பேனர்களை காட்டினர். இதையடுத்து மைதானத்தை நோக்கி ஊர்வலமாக வந்து கொண்டிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய இரசிகர்கள், வன்முறையில் ஈடுபடத் தொடங்கினர். முகத்தை மறைத்திருந்த சில இளம் இரசிகர்கள், பொலிஸை நோக்கி முதலில் கற்களையும், போத்தல்களையும் எறிந்தனர். ஆங்காங்கே, தெருக்களில் இரு நாட்டு இரசிகர்களும் மோதலில் ஈடுபட்டனர்.

இரும்பு பைப் கொண்டு தலையில் பலமாக தாக்கியதால், போலந்து இரசிகர் ஒருவர் மயங்கி விழுந்தார். இதேபோல, ரஷ்ய இரசிகர்கள் பலரும் வீதியில் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.


இதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தினர். பின் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கூட்டம் கலையாததால், ரப்பர் குண்டுகளை பயன்படுத்தி துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 15க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரு தரப்பில் இருந்தும் 130 ரசிகர்களை பொலிஸார் பிடித்துச் சென்றனர்.

ஏற்கனவே செக் குடியரசுக்கு எதிரான முதல் போட்டியின் போது, மைதானத்தில் இனவெறியை தூண்டும் பனர்களை வைத்திருந்தனர் ரஷ்ய அணியினர். இதுகுறித்து ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு விசாரித்து வருகிறது. இதில் ரஷ்ய கால்பந்து கூட்டமைப்பு தண்டனையை எதிர் நோக்கியுள்ளது. இப்போது, மீண்டும் ரஷ்ய இரசிகர்கள் வன்முறையில் ஈடுபட்டு, சர்ச்சை கிளப்பியுள்ளனர். ரஷ்யா, போலந்து அணிகள் மோதிய யூரோ கோப்பை கால்பந்து லீக் போட்டி சமநிலையானது.

## நடாலின் கடிகாரத்தை மீட்டுக்கொடுத்த பொலிஸ்

(பாரீஸ்)

பிரபல டென்னிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு சொந்தமான ரூ. 2 கோடி மதிப்பிலான கைக்கடிகாரத்தை பொலிஸார் மீட்டுக்கொடுத்தனர். பிரெஞ் ஓப்பன் போட்டியில் விளையாடுவதற்காக ஸ்பெயின் வீரரான நடால், பிரான்ஸ் தலைநகர் பாரீஸிக்கு சென்றிருந்தார். அங்குள்ள பிரபல விடுதி ஒன்றில் அவர் தங்கியிருந்தார். இந்த நிலையில் நடால் தனது அறையில் வைத்திருந்த ரூ. 2 கோடி மதிப்பிலான கைக்கடிகாரம் காணாமல் போனது. இதையடுத்து திருடனைப் பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்ட பொலிஸார், கைக்கடிகாரத்தை திருடியது அந்த ஹோட்டலில் வேலை பார்த்த பார்மேன் என்பதைக் கண்டுபிடித்தனர். இதையடுத்து அவரை கைது செய்த பொலிஸார், வீட்டில் மறைத்து வைத்திருந்த கைக்கடிகாரத்தையும் மீட்டனர். இதுதொடர்பாக ஜெர்மனியின் ஹாலேவில் உள்ள நடால் கூறுகையில், பிரான்ஸ் பொலிஸார் சிறப்பாக செயல்பட்டு கைக்கடிகாரத்தைக் கண்டுபிடித்துள்ளனர். அதற்காக அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த சம்பவத்துக்கு நான் தங்கியிருந்த ஹோட்டல் மீது குற்றம் சுமத்த விரும்பவில்லை. கடந்த 8 ஆண்டுகளாக பிரெஞ்சு ஓபனில் விளையாட வரும்போதெல்லாம் இங்கு தங்கியிருக்கிறேன். எந்தத் தவறும் நடந்ததில்லை. அடுத்த முறையும் பிரெஞ்சு ஓபனில் விளையாட வரும்போது அதே ஹோட்டலில் தங்குவேன் என்று கூறியுள்ளார்.








# வடமாகாண ஆண்கள் ஹொக்கி யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்

(வவுனியா)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டித் தொடரின் ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனானது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டித் தொடரின் 19 வயது ஆண்களுக்கான போட்டி வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதுடன், வலிகாமம் கல்வி வலயத்தில் ஒன்றை ஒன்று எதிர் கொண்ட அனுபவங்கள் பல இருந்தமையால் இரு அணிகளின் பலவீனம், பலம் என்பன இரு அணிகளுமே நன்கு அறிந்திருந்தன.

ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சிறப்பானதொரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றிருந்தது. இறுதியில் ஆட்டம் நிறைவடையும் வரை யூனியன் கல்லூரி அணி வீரர்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இறுதியில் அது தோல்வியில் நிறைவடைந்தது. இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண மட்ட சம்பியனாகியது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணியும், மன்னார் சென். ஜோசப் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் மோதின.

இதில் போட்டியில் ஆரம்பம் முதலே யாழ். மத்திய கல்லூரி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துறை உட்பட பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## ஜே.பி.எல்.

### சாதனைத் துளிகள்...

ஜே.பி.எல் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் கடந்த 11ஆம் திகதி வரையான போட்டிகளின் சாதனைத்துளிகள் வருமாறு

* இதுவரை மொத்தமாக 95 ஆறுகள், 253 நான்குகள் அடங்கலாக 363.5 பந்துப் பரிமாற்றங்களில் 2552 ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளன....
* இதுவரை இத்தொடரில் அதிகூடிய நான்கு ஓட்டங்களை பெற்றவர் ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த கார்த்திக்-20 நான்குகள்
* இதுவரை இத்தொடரில் அதிகூடிய ஆறு ஓட்டங்களை பெற்றவர்கள் ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த கார்த்திக்-5 ஆறுகள், சென் றலைட்ஸ் அணியைச் சேர்ந்த ஷெல்டன்-5 ஆறுகள் கொக்குவில் கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த உத்தமன் -5 ஆறுகள்
* இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அதிகூடிய பிடிகளை எடுத்தவர் ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த சந்திரவதனன்-10 பிடிகள்
* இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அதிகூடிய இலக்குகளை கைப்பற்றியவர் ஜொலிஸ்டார் அணித் அணித் தலைவர் சைலேஸ்வரன் - 10 இலக்குகள்
* இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்தவர் ஜொலிஸ்டார் அணியைச் கார்த்திக் - 133 ஓட்டங்கள்
* தனிநபருக்கான அதிகூடிய ஓட்டம்-ஜொலிஸ்டார் அணியைச் சேர்ந்த கார்த்திக் 73 ஓட்டங்கள்
* சிறந்த பந்து வீச்சுப்பெறுமதி- ஜொலிஸ்டார் அணியைச்சேர்ந்த சைலேஸ்வரன்-11/5 (11 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள்)
* ஜே.பி.எல் போட்டி தொடரின் இதுவரை மொத்தமாக 6 அரைச்சதங்கள் பெறப்பட்டன. கார்த்திக் 2 அரைச்சதங்களையும், ஜெயரூபன், செல்ரன், ரஜீவ்குமார், விதுபாலா ஆகியோர் ஒவ்வொரு அரைச்சதங்கள்ளை பெற்றுள்ளனர்.
* ஜே.பி.எல் தொடரில் எந்தவொரு விக்கெட்டுக்குமான அதி கூடிய இணைப் பாட்டமான 107 ஓட்டங்களை ஜொலி ஸ்டார்ஸ் அணியை சேர்ந்த கார்த்திக் மற்றும் உமாதரன் ஜோடி பதிந்தது. (எஸ்.பி.)

# வடக்கு மாகாண மட்டக் கபடி வவுனியா மாவட்டம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட கபடிப் போட்டியில் வவுனியா மாவட்டம் சம்பியனாகியது.

வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற இக்கபடிப் போட்டி கடந்த 10ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும், முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிபடுத்திய வவுனியா மாவட்ட அணி 118 - 25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின.

இரு அணிகளுமே சிறப்பாக ஆடியபோதும் இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 52 - 49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதின. மிகப் பலம் வாய்ந்த போட்டியாக இடம் பெற்ற இப் போட்டியில் வவுனியா மாவட்ட அணி 37-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாகாண சம்பியனாகியது. (93)

## கொக்குவில் இந்து சம்பியன்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு பெணகளுக்கிடையிலான போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி முதல் முறையாக முதலிடம் பிடித்துள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் முதல் நான்கு இடங்களைப் பிடித்துக் கொண்ட பாடசாலை அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது. முதல் நான்கு இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகளின் விபரம் வருமாறு: கொக்குவில் இந்துக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (12)

## மன்னாரில் மாகாண எல்லே

(மன்னார்)

வடமாகாண மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான எல்லே போட்டிகள் வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போட்டிகள் மன்னார் முருங்கன் மகாவித்தியால மைதானத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 15 அணிகள் விளையாடவுள்ளன. கடந்த ஆண்டு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டம் நான்காமிடம்


(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட கரம் போட்டியில் யாழ். மாவட்டம் நான்காமிடத்தைப் பிடித்துக் கொண்டது. அனுராதபுரத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் முதல் போட்டியில் யாழ் மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 25 - 0 என்ற கணக்கில் வென்று இரண்டாவது ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் வவ்னியா மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்டம் 25 - 01 என்ற கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் குருநாகல் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் குருநாகல் மாவட்டம் 18- 11 என்ற கணக்கில் வென்றது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். மாவட்ட அணியும், பதுளை மாவட்ட அணியும் மோதின. இதில் பதுளை மாவட்டம் 15-07 என்ற கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் படித்துக் கொண்டதுடன் யாழ். மாவட்டம் நான்காமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)



# சம்பந்தனின் தடுமாற்றங்கள்

- சாலையூரான் -

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினை தீர்வுக்கு தயார், வடக்கு மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரம் கிடைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம், அரசுடன் பேசி தீர்வுகளை காண ஆவலாக இருக்கின்றோம் என ஒருபுறத்தே கூறிக்கொண்டு அதனை ஒரேயடியாக மறுதலிக்கும் வகையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என பிந்தியதாக சம்பந்தன் கூறியிருப்பது கட்டுக் கோப்பற்ற அரசியலொன்றுக்குள் தாம் சிக்குண்டு இருப்பதை சம்பந்தனே ஏற்றுக் கொண்டிருப்பதாகும். இது ஒரு புறம் இருக்க, புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமாக அமைவதாகக் கூறி அவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்றும் தமிழ் மக்கள் விடயத்தில் புலம்பெயர் தமிழர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு கருத்தையும் அண்மையில் சம்பந்தன் வெளியிட்டிருக்கிறார்.தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளை விமர்சிக்கும், இவர்களை விட அதிதீவிரத் தமிழ்த் தேசிய நிலைப் பாட்டிலுள்ள புலம்பெயர் தமிழர்களின் கருத்துக்களை நேரடியாக சந்திக்க விரும்பாத சம்பந்தன், தனது கட்சிக்கு எதிரான விமர்சனங்களை தமிழ் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளாக காண்பிக்க முயற்சிப்பது அவர்களை மேலும் ஆத்திரமூட்டுவது ஆகும்.யாழ் மேதின கூட்டத்தில் எதிர்க்கட்சியுடன் இணைந்து சம்பந்தன் சிங்கக் கொடி யுடன் மேடையில் தோன்றியமை, வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை கேட்டு நிற்பது, நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க முயற்சிப்பது, நாங்கள் தனி நாடு கோரவில்லை என்பது போன்ற முன்னுக்குப்பின் முரணான தளம்பலான செயற்பாடுகள் தீவிரத் தேசியவாத நிலைப்பாட்டிலுள்ள புலம்பெயர் தமிழர்களை கடுப்பேற்றியிருக்கும் விடயங்களாகும். அவர்களின் பாஷையில் கூறுவதானால், புலிகளையும் தமிழ் மக்களையும் கொன்றொழித்த இலங்கை அரசுக்கு அமெரிக்காவைக் கொண்டு சரியான பாடம் புகட்ட வேண்டும், தமிழர்கள் தம்மைத்தாமே ஆள வகை செய்ய வேண்டும், அரை குறைத் தீர்வுகளுக்காக அரசுடன் இணங்கிச் செல்லக் கூடாது, தனியாட்சிக்கான நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கவேண்டும். இவையனைத்துக்கும் வலுச் சேர்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்பனவே புலம்பெயர் தீவிரத் தேசியர்களின் விருப்பங்களா கும். அந்தப் புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தற்சமயம் தாம் பிறந்த நாட்டில் வசிப்பவர்கள் அல்ல. சாத்தியமான சாதகமான நிலைமைகளை அனுசரித்து அரசுடன் விட்டுக் கொடுத்து நகர்வது, அரசுடன் எதனைப் பெறலாம் பெறமுடி யாது என்பது பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்வது என்பதெல்லாம் அவர்களுக்கு நடைமுறையில் சாத்தியமற்ற விடயங்களாகும். சர்வதேச நிலைப்பட்டு ஊடகங்களால் இலங்கை அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஒரு அரசியல் பிரசார வழிமுறைகளால் இலங்கை அரசை முற்று முழுதாக மறுதலிக்கும் செயற்திட்டமொன்றையே அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை அவர்களது வளமான எதிர்காலம் என்பது உள்நாட்டில் இருந்து மேலும் தொடர்ச்சியான புலம் பெயர்தலை நோக்கி மக்கள் வழி நடத்தப்படுவதாகும். புலிகள் நாட்டில் நிலை கொண்டிருந்த ஒரு சூழலில் தம்மை மேலும் நிலைப்படுத்திக் கொள்வதற்கும் பலமான நிதியீட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு புலம் பெயர்ந்த இந்தப் பகுதியினர் புலிகளுக்கு சிறந்த ஒரு அடித்தளமாக இருந்து வந்திருக்கின்றார்கள்.

இந்தச் சூழலில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தனது அடித்தளத்தை வலுப்படுத்தி வந்திருக்கின்றது. புலிகளின் சூழலில் நாடாளுமன்றக் கதிரைகளை தக்கவைத்துக் கொண்டவர்களுக்கு இப்போது அப்புலியாதரவுப் புலம் பெயர் தமிழர்களிடத்தில் அதனைத் தக்க வைப்பதற்கான ஆதரவுத் தளத்தை தொடர்ந்து பேணிக் கொள்வது சிரமமாக இருக்கிறது. இதன் வெளிப்பாடே புலம் பெயர் தமிழர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படக் கூடாது என்கின்ற சம்பந்தனின் ஆதங்கமாகும். சம்பந்தனது இந்த ஆதங்கம் என்பது தாம் முன்னெடுக்கும் அரசியல் செயற்பாடுகளை ஆதரித்தே புலம்பெயர்ந்தவர்கள் தமது சூழலில் அரசியலை முன்னெடுக்கவேண்டுமே தவிர வேறெந்த அரசியல் வழிமுறைகளையும் புலம் பெயர்ந்தவர்கள் கொண்டிருக்கக் கூடாது என்பதாகும். இது அவர்களை மேலும் ஆத்திரமூட்டுவதாகவே முடிந்திருக்கிறது.

ஒரு கட்டுரை தமிழில் எழுதப்படும் பொழுது, அதை எழுதுகின்ற ஒவ்வொருவருக்கும் பல நோக்கங்கள் இருக்கின்றன. இந்த நோக்கங்கள், தமிழினதும் மற்றும் தமிழ் இனத்தினதும் பெருமைகளை எந்த விமர்சன

# அடையாளங்களுக்கு வெளியில்...

ஆய்வுமின்றி எழுதுவது. அல்லது தமிழ் பேசும் சமூகங்களுக்குள் இருக்கின்ற பிற்போக்குத்தனங்களை சுட்டிக்காட்டி விமர்சிப்பது.

இதைவிட நம்மை அடக்குகின்ற சுரண்டுகின்ற அழிக்கின்ற அரசுகள், அரசாங்கங்கள் மற்றும் பிற இனங்கள் போன்றவற்றின் மேலாதிக்க கருத்தாதிக்கங்களையும் செயற்பாடுகளையும் தெளிவாக்குவதன் மூலம் அது பற்றிய விழிப்பை பொது மனிதர்களிடம் உருவாக்குவது. அல்லது விளக்குவதன் மூலம் அடக்குமுறையாளர்களுக்கு அல்லது குறிப்பிட்ட இன, மதத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வை உருவாக்குவது.

இதில் நாம் எதைச் செய்யப் போகின்றோம் என்பது நமது புரிதல்கள், நிலைப்பாடுகள் மற்றும் தேவைகள், நோக்கங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. தமிழ் மொழியில் எழுதுகின்றவர் என்ற அடிப்படையில் எனது பொறுப்பு என்ன?

நண்பர் சுவிஸ் ரவி தனது முகப்பு புத்தகத்தில் பின்வரும் வகையில் ஒரு கருத்தை எழுதியிருந்தார். நாம் எந்த இன மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றோமோ அந்தப் பக்கத்தை நியாயப்படுத்தியே நமது கருத்துகளை முன்வைக்கின்றோம். அதேவேளை இன்னுமொரு சாராரோ தாம் இனவாதி இல்லை எனக் காண்பிப்பதற்காகவோ அல்லது முற்போக்குவாதி என நிருபிப்பதற்காகவோ தாம் சார்ந்த இனத்திற்கு எதிரான நிலையில் நின்று கருத்தை முன்வைக்கின்றனர். இவற்றால் எந்தப் பயனும் இல்லை என்பது மட்டுமல்ல இவை மேலும் பல முரண்பாடுகளை வளர்க்கவே உதவும் என்ற கருத்துப்படக் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் தமது இன, மத, மொழி அடையாளங்கள் போன்ற எல்லாவற்றுக்கும் வெளியில் நின்று பார்ப்பதனூடாக தமது கருத்துக்களை முன்வைப்பதே ஆரோக்கியமானதாகும். ஏனெனில் இதுவே அவர்களை உண்மைக்கு அருகாமையில் கொண்டு செல்வதற்கும் சரி யான திசையில் வழிகாட்டக் கூடியதாகவும் இருக்கும்.

தமிழில் எழுதப்படுகின்ற பெரும்பாலான கட்டுரைகள் சிங்கள மக்களுக்கு எதை நாம் கூற விரும்புகின்றோமோ அதையே தமிழில் எழுதி தமிழ் மக்களுக்கு கூறுகின்றோம். தமிழ் மக்களுக்கு எதைச் சுட்டிக் காட்டி எழுத வேண்டுமோ அதை எழுதாமல் தவிர்த்து விடுகின்றோம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மனிதர்கள் இன்று தோற்றுப் போன ஒரு இனம். ஆம்! தமிழ் இனத்தின் தன்முனைப்புக்கும் அதன் தற்பெருமைகளுக்கும் மாபெரும் அடி விழுந்துள்ளது. இதனால் நாம் நொந்துபோயிருக்கின்றோம் என்பது உண்மை. இதன் விளைவாக உருவான வெப்பியாரத்தில் நமது எழுத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் உணர்ச்சிகரமாக எதிர்வினையாற்றுகின்றன.

இதற்கு மாறாக சற்று நின்று, நிதானித்து கடந்த காலத்தையும் நம் மீது ஆதிக்கம் செலுத்தும் கருத்தாதிக்கங்களையும் அலசுவதுதான் பொருத்தமான சரியான செயற்பாடாகும். நமது எழுத்துக்கள் நம்மை, தமிழ் பேசும் மனிதர்களை, நோக்கிய விமர்சனங்களாக இருக்க வேண்டும். தமிழில் எழுதுபவை தமிழ் வாசகர்களுக்கானபோதும் அது அவர்களது உணர்ச்சிகளைச் சுரண்டி பிழைப்புவாத அரசியல் நடத்துவதற்கானதாக இருக்கக் கூடாது. மாறாக எவ்வாறு நமது உணர்ச்சிகளை ஆரோக்கியமான வழிகளில் பயன்படுத்தலாம் என்பதற்கான முயற்சியாகவே நமது எழுத்துக்கள் அமைய வேண்டும்.

பலர் தாம் இருக்கின்ற இடத்தில் எது ஆதிக்கமாக இருக்கின்றதோ அதனுடன் இசைந்துபோவர் அல்லது உடன்பாடு இல்லை எனின் மௌனமாக இருப்பர். இவ்வாறான இரட்டைநிலைத் தன்மை அல்லது பிழைப்புவாதம் அல்லது தப்பிப்பிழைத்தல் போன்ற நிலைப்பாடுகளை எடுப்பதற்கு அவரவர்களுக்கு நியாயமான காரணங்கள் இருக்கும். ஆனால் இவ்வாறான நிலைப்பாடுகள்தான் நமது விடுதலைப் போராட்டத்தை இன்றைய நிலைக்கு கொண்டுவந்து விட்டிருக்கின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்வது சிறந்தது.

- மீராபாரதி

சில உண்மைகளை நம்மால் எளிதில் நம்ப முடியாது. கற்பனையோ, கட்டுக்கதையோ என்று யோசிக்கத் தோன்றும். உதாரணமாக இன்று உலகத்திலேயே உயர்ந்த மலையாக விளங்கும் இமயமலை ஒரு காலத்தில் ஆழ் கடலுக்குள் இருந்தது என்றால் யாராவது நம்புவார்களா? ஆனால் அதுதான் உண்மை.

நமது உலகம் தோன்றும்போது அது இப்போது நாம் காணும் தோற்றத்தில் இல்லை. இப்போது கடல்கள் சூழ்ந்து காணப்படும் ஐந்து கண்டங்களும் அப்போதே இருந்தன. ஆனால் ஒரு

# கடலுக்குள் இருந்த இமயம



வித்தியாசம். அவை இப்போது இருப்பதைப் போல் ஐந்து கண்டங்களாக இல்லை. உலகத்தின் சிறுபகுதி வெறும் நிலத்திட்டாகவும் பெரும் பகுதி நீரால் சூழப்பட்டதாகவும் இருந்தது. ஆனால் அந்த நிலத்திட்டு நிலையாக இருக்கவில்லை. எப்போதும் நகர்ந்துகொண்டே இருந்தது. அதை கண்டங்களின் நகர்வு என்கிறார்கள். அதற்குக் காரணம் பூமி ஒரே திடப்பொருளாக இல்லாததுதான்.

பூமி முக்கியமாக நான்கு அடுக்குகளாகக் காணப்படுகிறது. பூமியின் மையத்தில் கனமான திடப் பொருளால் ஆன மையப் பகுதி உள்ளது. அதைச்சுற்றி திரவ நிலையில் உள்ள புறமையம் இருக்கிறது. அந்தப் புற மையத்தைச் சுற்றி இறப்பர் போன்ற "மேன்டில்" பகுதி உள்ளது. அந்த மேன்டில் மீள்தன்மை உடையது. கிட்டத்தட்ட "பாகு" நிலையில் இருக்கிறது. இந்த மேன்டிலின் மீதுதான் நாம் இருக்கும் நிலப்பகுதி மிதந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய நிலப்பகுதி ஒரே துண்டாக இல்லாமல் பல துண்டுகளாக இருப்பதால் அவை மேன்டிலின் மீது நகர்ந்துகொண்டே இருக்கின்றன. இதனால் ஒரு காலத்தில் நிலமாக இருந்த பகுதி இப்போது கடலாகவும், கடலாக இருந்த பகுதி இப்போது நிலமாகவும் இருக்கின்றன. அதாவது பூமியின் முகத்தோற்றம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகிறது.

தமிழ் நாட்டுக்குத் தெற்கே லெமுரியாக் கண்டம் என்ற ஒரு நிலப்பரப்பு இருந்தது என்றும், பின்னர் அதை கடல்கொண்டுவிட்டது என்றும் படித்திருக்கிறோம். அதற்கு இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன.

இதேபோல் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் ஈரானும்,

# ஐ.பி.எல் திரைப்பட விமர்சனம்

கடந்த ஆண்டுகளில் வெறும் அடிதடி, கொலைக் குத்து என்று சாதாரண மசாலா படம் போலக் காட்சியளித்த இந்தியன் பிரிமியர் லீக் என்கிற ஐ.பி.எல் தற்போது அமோக ஆடைக் குறைப்பு, ஹோட்டல் ரேப் சீன் என்று மிட்நைட் மசாலா கட்டத்தை அடைந்திருக்கிறது. அதனால் என்ன, நமக்கு வேண்டியது விவஸ்தையில்லாத கொண்டாட்டம். அது திண்டாட்டம் இல்லாமல் கிடைத்தது. தரிசித்தோம், பிறவிப் பயன் அடைந்தோம் என்று உற்சாகமாக இருக்கிறார்கள் ஐ.பி.எல் ரசிகர்கள்.

பல போட்டிகள் கடைசிப் பந்துவரை சென்று ஏகத்துக்கும் பரபரப்பைக் கூட்டினாலும், டி.ஆர்.பி ரேட்டிங்ஸ் அடிப்படையில் முதல் நான்கு ஐ.பி.எல் களை விட ஐந்தாவது ஐ.பி.எல்லைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை குறைவே. இதில் விளம்பரதாரர்களுக்கு ஏமாற்றம். விளம்பரக் கட்டணங்கள்கூட கடந்த வருடங்களைக் காட்டிலும் குறைவுதான்.

ஐ.பி.எல் நீண்ட நாள் தாங்காது. "மைதானத்துக்கு வெளியே அரை குறை ஆடையுடன் ஆடுவதையும், மைதானத்துக்குள் சகட்டு மேனிக்கு பந்துவீச்சாளர்களை வெளுத்துவாங்குவதையும் எத்தனை நாள்தான் அலுக்காமல் பார்ப்பது" என்று ஐ.பி.எல் ஆரம்பித்ததிலேருந்தே சில வல்லுனர்கள் கூறி வந்திருக்கிறார்கள். "நாங்கள் சொல்வதை எவன் கேட்டான்" என்று மீண்டும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

20-20 என்கிற விஷயமே சில கிரிக்கெட் வல்லுனர்களுக்கு பிடிப்பதில்லை. எந்த சாதாரண துடுப்பாட்டக்காரரும் 40, 50 அடிக்கலாம், சுமாரான பந்துவீச்சாளர் கூட மூன்று, நான்கு விக்கெட்களை எடுக்கலாம். இதெல்லாம் கிரிக்கெட்டில் சேர்த்தியா என்று அவர்கள் புலம்புவதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

ஸ்வம்னிள் அஸ்னோட்கர், போல் வல்தாத்தி,






திருமலசெட்டி சுமன், மனீஷ் பாண்டே இவர்களை ஞாபகம் இருக்கிறதா? இருந்தால் தான் ஆச்சரியம். முதல் நான்கு ஐபிஎல்களில் ஏதோ ஒரு சீஸன் மட்டும் அரை சதங்கள் அடித்து அசத்தியவர்கள் இவர்கள். இப்பொழுது காணாமல் போனவர்கள் பட்டியலில் அமர்ந்துகொண்டு, கவலை-யோடு காத்திருக்கிறார்கள்.

என்ன ஆச்சு இவர்களுக்கு?

ரொம்ப சிம்பிள். அவர்கள் "பவுசு" அவ்வளவு தான். வல்லுனர்கள் சொல்வது போல், 20-20 என்பது ஒரு "அவசர அடி ரங்கா" ஆட்டம். சிலருக்கு ஒரு சீஸன் சுக்கிர தசை அடிக்கலாம். பெரியதாக திறமை இல்லை என்றாலும் பரவாயில்லை. கண்ணை மூடிக்கொண்டு சுத்தினால் போதும். தப்பித்தவறி இரண்டு மூன்று அரை சதங்கள் கிடைத்துவிடும். அடுத்த வருட ஏலத்தில் ஆறு கோடிக்கு மேல் ஏலம் போய்விடுவார்கள். நாமும் விவஸ்தை கெட்டு "ஆஹா அடுத்த ஹீரோ கிடைத்து விட்டார்" என்று தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுவோம். அப்படி அவசரப்பட்டுக் கொண்டாடிவிட்டு, திடுதிப்பென கீழே வீசிய நபர்கள்தான் இந்த அஸ்னோட்கர் உள்ளிட்டோர்.

ஐபிஎல் வெறும் 20-20 கூத்து. இதைப் பார்த்தோமா, ரசித்தோமா, டிவியை அணைத்து விட்டு போய் படுத்தோமா என்று இருக்க வேண்டும். யூஸுஃப் பதான் ஒரு ஐ.பி.எல் சீசனில் சிக்ஸர் சிக்ஸராக அடித்தார் என்று அவரை பல்லக்கில் ஏற்றி, பரிவட்டம் கட்டி ஒருநாள் போட்டிகளுக்கும் எடுக்கப்பட்டார். என்ன செய்தார்? ம்ஹூம். இது போதாதென்று அவரை கொல்கத்தா அணி எக்கச்சக்கமாகப் பணத்தைக் கொட்டி ஏலம் எடுத்தது. மனிதர் ஒரு போட்டியில் கூட அடிக்கவில்லை.

அதற்காக 20-20 ஆட்டமே குப்பை என்று ஒதுக்கித் தள்ளவேண்டியதில்லை. 20-20 ஒரு மசாலா படம். ஜாலியாக ரசிக்கலாம். 50 - 50 ஒரு நாள் போட்டி வேறு ரகம். இதற்குக் கொஞ்சம் கூடுதல் திறமை அவசியம். டெஸ்ட் போட்டிகள்



உன்னதம். இதற்கு திறமை-யோடு பொறுமை, அசாத்திய நம்பிக்கை என்று ஏகப்பட்ட குணங்கள் வேண்டும். சுருங்கச் சொன்னால் 20-20, 50-50 மற்றும் டெஸ்ட் போட்டிகள் வெவ்வேறு க்ரூப் இரத்த வகைகள். ஒன்றை மற்றொன்றில் பாய்ச்ச நினைப்பது முட்டாள்தனமானது. அபாயகரமானதும்கூட.

ஐபிஎல்லை ஆதரிப்பவர்கள் கூறும் வாதம் ஒன்று உண்டு. ஐபிஎல்லினால் உள்ளூர் இளைஞர்கள் உலகத்தின் தலைசிறந்த ஆட்டக்காரர்களுடன் ஆடும் வாய்ப்பு கிடைக்கும். அவர்களிடமிருந்து ஏராளமான விஷயங்களையும் தந்திரங்களையும் கற்றுக்கொள்ள முடியும். இதனால் உள்ளூர் வீரர்கள் உலகத் தரம் வாய்ந்தவர்களாக விளங்க முடியும் என்பதுதான் அது. ஏற்றுக் கொள்ளக்கூடிய வாதமே. பள்ளிக்குச் சென்று படிப்பதை விட அனுபவ அறிவு சிறந்ததுதான். ஆனால் நடப்பது என்ன?

இந்த வீரர்கள் என்ன கற்றுக்கொண்டார்களோ தெரியவில்லை. வெளிநாட்டு வீரர்கள் இங்கு வந்து ஆடிப் பழகி நம் சீதோஷ்ண நிலை-யைத் தாக்குப்பிடிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை திறமையாகச் சமாளிக்கப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.

இதெல்லாமாவது மைதானத்துக்குள் நடந்த கிரிக்கெட் சங்கதிகள். ஆனால், அதற்கு வெளியே நடக்கும் கூத்துகள் இருக்கின்றனவே... அடேயப்பா.. அவுஸ்ரேலிய ஆட்டக்காரர் ஒரு பெண்ணை ஹோட்டலில் மானபங்கப் படுத்த முயற்சித்திருக்கிறார் என்று ஒரு புகார். அவரோடு இந்திய ஆட்டக்காரர் சென்று அந்தப் பெண்ணை மிரட்டியிருக்கிறார் என்று ஒரு செய்தி.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் உரிமையாளரான சித்தார்த் மல்லையா ஆட்டக்காரர்களையே மிஞ்சிவிட்டார். "அந்தப் பெண் அப்படி ஒன்றும் பத்தினி இல்லை. என்னிடமே வழிந்தார், மேலே விழுந்தார்" என்று இணையத்தளத்தில் எழுதித் தீர்த்திருக்கிறார். விளைவு, அவர் மீது வழக்கு தொடுத்திருக்கிறார் சம்பந்தப்பட்ட பெண்.

இவையெல்லாம் போதாதென்று மும்பை கிரிக்கெட் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைய முயன்றவர்களை நியாயமாகத் தடுக்க முனைந்த பொலிஸ் அதிகாரியை மிரட்டி இருக்கிறார் கொல்கத்தா அணியின் உரிமையாளர் நடிகர் ஷாருக்கான். ஏன் என்று கேட்டதற்கு, "பொலிஸார் என்னோடு வந்த பெண் குழந்தைகளை தகாத முறையில் நடத்தினார்கள்" என்று காரணம் சொல்லியிருக்கிறார். ஆனால், ஷாருக்கான் அளவுக்கு மீறி மது அருந்தியிருந்தார் என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஐபிஎல்லுக்கு வெளியேதானே இதெல்லாம் நடந்தது. இதற்கு எப்படி ஐபிஎல்லை குற்றம் சொல்ல முடியும் என்று ஐபிஎல் ஆதரவாளர்கள் வக்காலத்து வாங்குகிறார்கள். ஆனால் இத்தனை அக்கிரமங்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததே ஐபிஎல் அமைக்கப் பட்டிருக்கும் விதம்தானே. இத்தனை அசிங்கங்களுக்கும் ஆதாரமாக இருப்பது ஐபிஎல் நடத்தப்படும் முறைதானே.

திரை நட்சத்திரங்களுக்குத் தரப்படும் முன்னுரிமை, கவர்ச்சிக்குத் தரப்படும் முக்கியத்துவம், மைதானத்தில் அரைகுறை அழகிகளின் அட்டகாசம், டிவியில் பேட்டி எடுக்கும் பெண்களின் ஆடைக் குறைப்பு, போட்டி முடிந்ததும் நடக்கும் இரவு நேர விருந்துகள், இராக்கூத்து வைபவங்கள் என்று ஐபிஎல்லையே ரிக்கார்ட் டான்ஸ் கச்சேரி போல ஆக்கிவிட்டபிறகு இதுபோன்ற கேவலமான கேளிக்கைக் களியாட்டங்கள் நடக்கவில்லை என்றால்தான் ஆச்சரியப்பட வேண்டும். இனி வரும் ஐபிஎல்களில் இதையெல்லாம் விட இன்னமும் பல வைபோகங்கள் விமரிசையாக நடக்கும். அதையும் நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம்தான் ஐபிஎல் ரசிகர்களாயிற்றே!

**- நன்றி: ஆழம்**

---

லை

சீனாவும் ஒரே கடலால் இணைக்கப்பட்டிருந்தன. லடாக், நேபாளம் ஆகிய பகுதிகள் கூட கடலாகத்தான் இருந்திருக்கின்றன.

இந்தப் பகுதிகள் எல்லாம் கடலாக இருந்தன என்று எதை வைத்துக் கூறுகிறார்கள்? பூமியின் வரலாற்றைப் பல்வேறு காலகட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் எந்தெந்தப் பகுதியில் என்னென்ன விலங்குகள் வாழ்ந்தன என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

பழங்காலத்தில் வாழ்ந்த விலங்குகளில் சில பூமிக்கடியில் பாறைகளில் புதைபடிவங்களாகப் பாதுகாக்கப்பட்டன. பூமியைத் தோண்டி ஆராய்ச்சிகளை மேற்கொண்டால் அங்கு இயற்கையால் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் விலங்குகளின் புதைபடிவங்களைக் காண முடியும். இந்தப் புதைபடிவங்கள் பூமியின் வரலாற்றையும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன.

இவ்வாறு இமயமலைப் பகுதியைத் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்தியபோது அங்கு கடல் வாழ் விலங்குகளின் புதைபடிவங்கள் காணப்பட்டன. அந்தப் புதைபடிவங்களில் காணப்படும் கடல்வாழ் விலங்குகள் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் கடலில் வாழ்ந்தவை. எனவே பல கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப் பகுதி கடலாக இருந்திருக்கும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்தனர். இந்த முடிவை வேறு பல சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.

---

## சங்கத் தமிழ் மலர்கள்...



சங்க இலக்கியமான குறிஞ்சிப்பாட்டில் 99 மலர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. தற்போதுள்ள மலர்களின் பெயர்களை அக்காலத்தில் வேறுவிதமாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உதாரணத்திற்கு சில:

**மலர்கள் - இலக்கியப் பெயர்கள்**

* பவள மல்லி - செடல்
* சரமஞ்சி - கொன்றை
* இட்லிப் பூ - பிண்டி
* துளசி - துழாய்
* சங்குப் பூ (நீலம்) - கருவிளை
* சங்குப் பூ (வெள்ளை) - செறுவிளை
* வில்வம் - கூவிளம்
* தாழை - கைதை
* ஆடுதொடா - அரும்பு

---

## பராந்தகன் மெனு

கும்பகோணத்தில் பராந்தக மன்னன் (கி.பி. 911) காலத்திய கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில், சிவயோகி ஒருவருக்கு ஒவ்வொரு நாளும், "உத்தம ஆகாரம்" அளிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட செய்தியைக் கூறும்போது, உத்தம ஆகாரம் என்பது என்னென்ன உணவு வகைகள் அடங்கியது என்பதை, பின்வரும் வகையில் குறித்து உள்ளது...

அரிசி இரு நாழி. கும்மாயம் புளிக்கறி. ஓர் ஆழாக்கு நெய். ஓர் உரி (2 ஆழாக்கு) தயிர். வெல்லக்கட்டி இரண்டு. இரண்டு வாழைப்பழம்.

- அந்த பராந்தகன் இப்போது உயிருடன் இருந்தால் கூட இப்படி எல்லாம் கொடுக்க முடியுமா?

---

## 'சீப்' ரேட்!

ஸ்கொட்லாந்தில் தான் உலகப் புகழ் பெற்ற விஸ்கி வகைகள் தயாராகின்றன. இந்த மக்கள் தம் கஞ்சத்தனத்திற்கும் உலகப் புகழ் பெற்றவர்கள்.

ஒரு அமெரிக்கருக்குத் தலை வழுக்கையானது. மறுபடியும் முடி வளர்வதற்காக ஏராளமாக செலவு செய்தார். இதே போல, ஸ்கொட்லாந்துகாரர் ஒருவருக்கு தலை வழுக்கையாயிற்று.

அவர் என்ன செய்திருப்பார் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?

விடை: தலை வழுக்கையான ஸ்கொட்லாந்துகாரர் தம்முடைய சீப்பை, "சீப்" ரேட்டுக்கு விற்று விட்டார்!

# விருமாண்டி : கமல் கையில் சிக்கிய பூமாலை

B.R. மகாதேவன்

**உண்மையைச்** சொல்வதனால் நெருக்கடிகள் வரும் என்றால் அதை உரத்த குரலில் சொல்பவனே கலைஞன். நாங்கள் வெறும் கோமாளிகள்தான் கலைஞர்கள் அல்ல என்று தமிழ் திரையுலகப் படைப்பாளிகள் சொல்லிக்கொண்டாலும் அவர்கள் கையில் இருப்பது கலை ஊடகமே. அதுவும்போக, சார்ளி சாப்ளினும் கோமாளி நடிகர்தான். ஆனால், அதிகாரமையத்தை அவரும் கேள்விக்குட்படுத்தவே செய்திருக்கிறர். நாஜி கொடூரம் பற்றி வெளியான படங்களிலேயே மிகவும் முக்கியமான படமான 'லை..ப் ஈஸ் பியுட்டி.'புல் சிரிக்க வைத்தபடியே சோகத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்திய ஒன்றுதான்.

நமது பாரம்பரிய நாடகங்களில்கூட கட்டியங்காரன், விதூஷகன் என்ற வேடங்களில் வரும் நடிகர்கள் அதிகார மதிப்பீடுகளை எவ்வளவோ எள்ளி நகையாடவே செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், நகைச்சுவை என்பது மிகவும் பாதுகாப்பான, அதே நேரம் வலிமையான ஓர் ஆயுதமே. விஷயம் என்னவென்றால், அதிகாரமையத்தைக் கேள்விக்குட்படுத்த நீங்கள் தயாரா இல்லையா என்பதுதான் அடிப்படைக் கேள்வி. அந்த அற உணர்ச்சி உங்களுக்கு இல்லையென்றால், உங்கள் கலைப் படைப்புகள் உங்கள் காலத்துக்கு முன்பாகவே செத்து மடிந்துவிடும்.

அந்தவகையில் கமலின் அடுத்த பலவீனமான படைப்பு விருமாண்டி. ஹே ராமை ஒப்பிடும்போது பலவகைகளில் நேர்த்தியான படம்தான் இது. என்றாலும் தன்னளவுக்குப் போதிய ஓட்டை உடைசல்களுடனே இதுவும் மிளிர்கிறது.

தென் மாவட்டங்கள் சாதி மோதலகளால் உருவான ஒரு போர்க்களம். நாயக்கர்கள் அங்கு செல்வந்தர்களாக இருப்பது உண்மைதான் என்றாலும் அவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அதிலும் தேவர்களுடன் மோதுவதை அவர்கள் நினைத்தே பார்க்க முடியாத நிலையே இன்று




நிலவுகிறது. தேவர்-தலித் மோதலைப் படமாக்கினால் பெரும் பிரச்சினைகள் வரும் என்பதால், உண்மை நிலையை அப்படியே விட்டுவிட்டு குறைவாக நடக்கும் நாயக்க-தேவர் மோதலை படத்தின் கருவாக ஆக்கியிருக்கிறார்.

தேவர் மகன் படத்தில் அதையே இரண்டு தேவர்களுக்கு இடையிலான சண்டையாகக் குறுக்கியிருப்பார். புலிகளுக்குள்ளும் சண்டை உண்டென்றாலும் மானின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புகள்தானே புலியின் அசல் உலகம். பேசாப் பொருளைப் பேசுதல் என்பது உலகம் பொய்யைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டாடும்போது உண்மையைத் துணிந்து சொல்வதில்

**புலிகளுக்குள்ளும் சண்டை உண்டென்றாலும் மானின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புகள்தானே புலியின் அசல் உலகம். பேசாப் பொருளைப் பேசுதல் என்பது உலகம் பொய்யைத் தலைக்குமேல் வைத்துக் கொண்டாடும்போது உண்மையைத் துணிந்து சொல்வதில் இருக்கிறது. அதாவது, எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்வதில் இருக்கிறது. எதைச் சொல்ல முடியுமோ அதைச் சொல்வதில் அல்ல.**

இருக்கிறது. அதாவது, எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்வதில் இருக்கிறது. எதைச் சொல்ல முடியுமோ அதைச் சொல்வதில் அல்ல.

எனவே, தென் மாவட்டத்தில் மண்ணுக்காகவும் பெண்ணுக்காகவும்தான் எப்போதும் சண்டை ஏற்படும் என்று கமல் சொல்லும்போது அவர் மணலுக்குள் தலையை நுழைத்துக் கொள்ளும் நெருப்புக்கோழியாகவே ஆகிறார்.

மரண தண்டனைக்கு எதிரான படம் என்கிற பம்மாத்து வேறு படத்தில் படு செயற்கையாக, எந்தவிதப் புரிதலும் இல்லாமல் திணிக்கப்பட்டிருகிறது. உண்மையில் மரண தண்டனை என்பது ஓர் அரசால் தரப்படும் தீர்ப்பு. நீதித்துறை, காவல்துறை, அதிகார வர்க்கம், அரசியல்வாதிகள், ஊடகங்கள், பொது மக்கள் என இன்றைய அரசின்/சமூகத்தின் அனைத்து முக்கிய துறைகளும் ஊழலில் திளைத்திருக்கின்றன. அப்படியான ஓர் அமைப்புக்கு ஒரு மனிதனின் உயிரைப் பறிக்கும் அதிகாரம் இருக்கவேகூடாது. இது முதலாவது பார்வை.

இரண்டாவதாக, ஒருவேளை ஓர் அரசு எல்லா தளங்களிலும் நியாயமாகவே இருப்பதாக வைத்துக்கொண்டாலும், மிகப் பெரிய தவறுக்குக்கூட உயிர் பறிப்பு என்பதை தண்டனையாக வைக்கவே கூடாது. குற்றவாளியின் வயதுக்கு ஏற்ப ஒற்றை அல்லது இரட்டை ஆயுள் தண்டனை என்று வேண்டுமானால் வழங்கிக் கொள்ளலாம் அதுவே ஒருவகையில் ஒருவரை இல்லாமல் ஆக்குவதுதான். ஒரு நவீன அரசுக்கு அந்த அளவுக்காவது தார்மிக அக்கறையும் பொறுப்பும் இருந்தாக வேண்டும்.

இந்தக் கோணத்தில் பார்த்தாலும் மரண தண்டனை கூடவே கூடாது. அதுவும்போக மரண தண்டனை கூடாது என்று சொல்வதற்கு இணையாக அது தேவை என்ற குரலும் சமூகத்தில் இருககத்தான் செய்கிறது. இந்தத் தரப்புகளின் மோதல் என்ற கோணத்தில் தான் மரண தண்டனை பற்றிய விவாதங்கள் எழவேண்டும்.

இந்த இரண்டில் எதுவாக இருந்தாலும் மரண தண்டனை என்ற விஷயத்தின் கொடூரத்தையும் அபத்தத்தையும் புரியவைக்க வேண்டுமென்றால் அந்தப் படம் அரசின் செயற்பாடுகளை மையமாகக் கொண்டதாக இருந்தாக வேண்டும். குறைந்தபட்சம் குற்றவாளியின் பின்னணிக்கு இணையாக அரசின் அநியாயமான செயற்பாடுகளையும் விவரித்திருக்க வேண்டும்.

ஆனால், இந்தப் படத்தில் காவல் துறையைச் சேர்ந்த பேய்க்காமன் என்ற ஒரே ஒரு கதாபாத்திரம் மட்டுமே அரசின் அங்கமாக இடம்பெறுகிறது. அந்தக் கதாபாத்திரமும்கூடத் தெளிவான வில்லன் பிம்பத்துடன் படைக்கப்பட்டிருப்பதால் அரசமைப்பின் மீதான விமர்சனமாக அது கூர்மை பெறவில்லை.

அதுபோல் பொய் சாட்சி சொல்லும நபர்கள் அனைவருமே மக்களின் துல்லியமான பிரதிநிதிகளாக முழுவடிவம் பெறவில்லை. சமீபத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த மன நிலை குன்றிய ஒருவரை வங்கிக் கொள்ளையன் என்று நினைத்து மக்கள் கூட்டம் அடித்து உதைத்ததைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பல்வேறு தூக்குத்தண்டனைகளின் போது மக்கள் கூட்டம் உற்சாகத்துடன் அதை வரவேற்று ஆர்ப்பரிப்பதைப் பார்த்திருப்பீர்கள். இவையே மக்கள் திரளின் தெளிவான சித்திரிப்பாக ஆக முடியும். அப்படி இல்லையென்றால் தனிப்பட்ட நபரின் குணாம்சமாக அது சுருங்கிவிட வாய்ப்பு உண்டு.


அந்தவகையில் மரண தண்டனை எதிர்ப்பு என்பது இந்தத் திரைக்கதையில் பலவீனமான ஒட்டு போலவே இருக்கிறது. எஸ்.வி.சேகர் தன்னுடைய துணுக்கு நாடகங்களில் சமூகத்துக்கு செய்தி எதுவும் சொல்லப்படுவதில்லை என்ற விமர்சனத்தை எதிர்கொள்ளும்வகையில் காபியில் சர்க்கரை குறைவா போட்டுக்கணும், குழந்தைகள் ஒழுங்கா படிக்கணும், அப்பா அம்மாவை மதிக்கணும் என்பதுபோன்ற நற்செய்திகளை ஒரு கதாபாத்திரத்தை விட்டு சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேச வைத்திருப்பார். கமல்ஹாசனும் தனது படத்தின் கனத்தைக் கூட்ட மரண தண்டனையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். எஸ்.வி.சேகரை விட கொஞ்சம் மேலான கலைநயத்துடன் அது இந்தப் படத்தில இடம்பெற்றிருக்கிறது. அவ்வளவுதான்.

படமானது கதாநாயகன், வில்லன் ஆகிய இருவரின் பார்வையில் சொல்லப்படும் கதையாக விரிகிறது. இந்த ரொஷோமான் யுக்தி படத்தில் மிகவும் மோசமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரொஷோமானில் உண்மை என்ன என்பது கடைசிவரை நமக்குப் புரியாமலேயே இருக்கும். அதுதான் உண்மையின் பன்முக சாத்தியக்கூறுகளையும் புதிர்த்தன்மையையும் வசீகரத்தையும் முழுவதுமாக எடுத்துக்காட்டும். இந்தப் படத்தில் வில்லனின் கதையானது முழுப் பொய் என்பது நாயகனின் கதையைக் கேட்டதும் தெரிந்துவிடுகிறது. எனவே, உண்மையின் பன்முகத்தன்மை இதில் இடம்பெறாமல் போய்விட்டது.

காட்சிகள் எல்லாம் எந்தவொரு தர்க்கத்துக்கும் சிக்காமலே போய்க் கொண்டிருக்கின்றன.

சிறுநீர் கழிக்கப்போன விருமாண்டியை பின்னால் இருந்து ஒருவர் அருவாளால் வெட்டுகிறார். வெட்டுப்பட்டவர் மக்கள் கூட்டம் இருக்கும் இடத்தை நோக்கி ஓடிவராமல், ஆளரவமற்ற தெருக்களினூடாக ஓடிப் போய நேராகத் தன் காதலி அன்னலட்சுமியின் வீட்டுத் தொழுவத்தில் போய்விழுகிறார். அந்த அருவாளோ /பெவிகால் போட்டு ஒட்டியதுபோல் விருமாண்டியின் உடம்புடன் ஒட்டியே இருககிறது. ரஜினிகாந்த் என்றால்கூட இதை நம்பலாம். ஏனென்றால், அவர் பெயரிலேயே காந்தம் இருக்கிறது. கமல் சாரின் பெயரில் மென்மையான கமலப் பூ மட்டும்தானே இருக்கிறது.

அந்த அருவாளில் கொ என்ற கொத்தாளத் தேவனின் பெயர் பொறிககப்பட்டிருப்பதை அன்னலட்சுமி பார்க்கிறாள் என்றொரு காட்சி பின்னால் வருகிறது. அதனால் அருவாள் கீழே விழவே இல்லை என்று காட்டப்பட்டிருக்கிறது. அதோடு விருமாண்டிக்கு அடுத்த இரண்டு மாதம் சிகிச்சை தர வேண்டிய அளவுக்கு அந்தக் காயம்





பலமாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், விருமாண்டியைத் தூக்கிச் செல்லும்போது, மல்லாந்து படுத்தபடியே இருக்கிறார். முதுகில் காயம்பட்டால் குப்புறப் படுக்க வைக்க வேண்டும் என்ற எளிய விஷயம்கூடப் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

இதுபோன்ற தவறுகள் ஏன் நடக்கின்றன என்றால், கதை, திரைக்கதை வசனத்தை செப்பனிடுதல் என்ற சங்கதியே தமிழில் நடப்பதில்லை. ஒரு சாதாரண கட்டுரை, கதை எழுதுவதாக இருந்தாலும் அதை ஐந்தாறு தடவை அடித்துத் திருத்தி எழுதுவது உலக் வழக்கம். இங்கோ கோடிகளைக் கொட்டி எடுக்கும் படத்தை எந்தவித முன் திட்டமிடலும் சரிபார்ப்பும் இல்லாமல் எடுத்துவருகிறார்கள்.

தப்பித்தவறி யாராவது இலக்கிய அல்லது எழுத்து ஊடகத்தில் பரிச்சயம் உள்ள ஒருவரை கதை திரைக்கதை வசனம் போன்றவற்றுக்கு உதவிக்காக வைத்துக்கொண்டால், அந்த பிரகஸ்பதிகளோ வாங்கிற காசுக்கு மேல கூவ ஆரம்பித்துவிடுகிறார்கள். நீ நின்றால் சிலை 'நடந்தால் கலை' பேசினால் காவியம்' தும்மினால் ஓவியம் என்று ஆஸ்தான வித்வானாக இருப்பதோடு மட்டுமல்லாமல் ஆஸ்தான விதூஷகராகவும் ஆகிவிடுகிறார்கள். இந்த நிலை மாறாதவரை, குரங்கு கையில் கிடைத்த பூமாலையாகத்தான் தமிழ் சினிமா இருந்து கொண்டிருக்கும்.

இந்தப் படத்துக்கு மாற்று திரைக்கதை எழுதுவதென்றால், முதலில் மரண தண்டனை எபிசோடை எடுத்து தனியே வைத்துவிடுவேன். அது தனியாக எடுக்கப்படவேண்டிய வலுவான கதை. அதுபோல் க்ளைமாக்ஸ் சண்டையும் படத்துடன் பொருந்தாத ஒன்று. அப்படிப் பார்த்தால், உயிருக்கு உயிராகக் காதலித்த ஒரு பெண்ணை காதலனே கற்பழித்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்படுதல் என்ற விஷயம் தான் கதையாக மிஞ்சும். அதை வைத்து மிக அற்புதமான படம் தமிழில் ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டிருக்கிறது. அதை விட மேலான ஒன்றை யோசிப்பது கடினமே. கமல் சார் 100 ஜென்மம் எடுத்தாலும் எட்ட முடியாத உயரத்தில் இருக்கும் படம் அது.

# பண்டையகால மரபுகளை வெளிப்படுத்தும் பெரியதம்பிரானின் "பொங்கல் விழா"



(சிகரம்)

மறவன்புலோ - நித்தர்புலம் பெரியதம்பிரான் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், பெரும்பொங்கல் விழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யூன் மாதம் 1 ஆம் திகதி கும்பாபிஷேகத்துடன் ஆரம்பமான மண்டலாபிஷேக நிகழ்வுகள் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று 108 சங்குகள் வைத்துச் செய்யப்பட்ட சகஸ்ர நாம சங்காபிஷேகத்துடன் நிறைவு பெற்றது.

நேற்று முன்தினம் மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு இக் கிராமத்தைச் சேர்ந்தவர்களால் பால் காவடி மற்றும் ஆட்டக்காவடிகள் என்பனவற்றுடன் பாற் செம்பு எடுத்தல், அங்கப் பிரதட்சணம் போன்ற நேர்த்திகடன்களுடன் மகேஸ்வர பூசை என்பவற்றுடன் பகல் நேரப் பூசைகள் யாவும் நிறைவு பெற்றன.

இந்தக் கிராமத்தினரின் வழக்கப்படி குல தெய்வமான பெரியதம்பிரானுக்கு இரவு நேர விழாவாக பறை மேளம் மற்றும் உடுக்கு என்பவற்றுடன் பெரிய வீட்டிலிருந்து பண்டம் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டதுடன், பிள்ளையார் பூசை இடம்பெற்றது. பிள்ளையார் பூசையினைத் தொடர்ந்து அம்மன் வசந்தம் மற்றும் பெரியதம்பிரான் மகிமை பாடப்பெற்றதுடன் இராக்காலப் பூசைகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து காத்தவராயன் சிந்து நடைக்கூத்துப் படிப்பும் நடைபெற்றது. நள்ளிரவு 12 மணிக்கு சாமப்பூசை இடம்பெற்றதுடன், மடை போடுதல், பல பானைப் பொங்கல், கண்ணீறு தெளித்தல் என்பனவும் நடைபெற்று இளநீர் வழி வெட்டுதலுடன் புதன்கிழமை அதிகாலை ஆறு மணிக்கு பெரும்பொங்கல் நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றன.

இந்த ஆலயத்தில் மற்றைய ஆலயங்களிலிருந்து வித்தியாசப் படுத்தப்பட்ட மௌன பூசை காணப்படுவதுடன், பிரசாதங்களைத் தயாரிக்கும் முறையிலும் ஏராளமான மாறங்கள் காணப்படுகின்றன.

இங்கு மோதகம், களி, பிட்டு, முறுக்கு, பால் உரட்டி, போன்ற அரிசியிலான பிரசாதங்களே படைக்கப்படுகின்றன. இதற்காக உரல், உலக்கை என்பன ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் வைத்து அரிசி இடிக்கப்பட்டு அங்கே நைவேத்தியங்கள் செய்யப்படுகின்றன.

**பொங்கல் முறை**

மண்ணினால் பிடித்த அடுப்பைச் சாணி இட்டு மெழுகி, மண் பானையிலே பொங்கல் பொங்கபபடும், இதில் பசுப் பாலே பயன்படுத்தப்படுகிறது. தென்னம் பாளையையே எரிப்பதற்கு விறகாகப் பயன் படுத்துவதுடன், இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் அனைவருமே இந்தப் பொங்கலைப் பொங்குவார்கள். அத்துடன் ஆண்களால் மட்டுமே பொங்கல் பொங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்



**கண்ணீறு தெளித்தல்**

பொங்கல் பொங்குவதற்காக இடப்பட்ட அரிசி அவிந்ததன் பின்னர் அதன் நீரை வடித்தெடுப்பர். அந்த நீரை ஆலயத்தின் உட்பகுதியிலிருந்து ஆலயத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் ஆலயத்தில் பூசை செய்யும் பூசகரால் தெளிப்பதே கண்ணீறு தெளித்தலாகும். இந்தக் கண்ணீறு தெளிப்பதன் ஊடாக கிராமத்திலுள்ள மக்களின் துன்பங்கள் யாவும் தீரும் என்பது இந்த மக்களின் நம்பிக்கை ஆகும்.

**வழி வெட்டுதல் அல்லது குரும்பை கொடுத்தல்**

ஆலயத்தின் பூசைகள் யாவும் நிறைவுற்றதும், பரிவாரங்களுக்குப் பலி கொடுப்பதற்காக குங்குமங் கலந்த பச்சை அரிசியினை ஆலயத்தின் நான்கு திசைகளிலும் எறியப்படுவதுடன், நான்கு திசைகளிலும் தேசிக்காய எறியப்படும் அத்துடன் ஆலயத்தின் வாசலிலிருந்து 100 மீற்றர் வரையான தூரத்திற்கு ஆலய வீதியினூடாக (வழி) இளநீர்களை வெட்டிச் செல்வதுடன், இறுதியாக நீற்றுப் பூசணிக்காயினை வெட்டிக் குங்குமம் பூசிவிடப்படும். இதுவே வழி வெட்டுதல் ஆகும் இந்த வழி வெட்டும நிகழ்வுடன் ஆலயத்தின் பொங்கல் திருவிழா நிறைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சங்கானையில் பட்டப்பகலில் ஆலயம் உடைத்து திருட்டு

(சிகரம்)

சங்கானை வீரபத்திரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் வேளையில் பெறுமதி மிக்க பித்தளைப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தின் அயலிலுள்ள சிலம்புப் புளியடி வைரவர் ஆலயத்தில் அன்றையதினம் நடைபெற்ற பூங்காவனத் திருவிழாவிற்கு இந்தக் கிராம மக்கள் சென்றுள்ளதனை அவதானித்த திருடர்கள், ஆலயத்தினுள் புகுந்து பித்தளையாலான குத்து விளக்குகள்,தீபங்கள், தீர்த்தக்கெண்டி போன்றவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இந்த ஆலயத்திற்குள் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கந்தர் மடம் சந்தியிலிருந்து பேபி ஸ்ரூடியோச் சந்தி வரையான வீதியின் இரு மருங்கிலும் யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் புற்கள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப் படுகின்றது. (சிகரம்)

## சுன்னாகம் அந்தோனியாரின் கூடுசுற்றும் தேர்ப்பவனி

(ஷர்மி-சிகரம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த கூடுசுற்றும் தேர்ப்பவனி நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் பூசை வழிபாடுகள் நடைபெற்று நேற்றுமுன்தினம் இறுதிநாளாக கூடுசுற்று நடைபெற்றது.

அத்துடன் இதே போல் நாட்டின் பல தேவாலயங்களிலும் இது போன்று கூடுசுற்றும் நிகழ்வு நடைபெற்றது.

# பதிவிறக்கப் பெட்டகம்

பழம் பெருமை பேசுகிற, இறுகிய சமூக ஒழுங்குகளை நியாயப்படுத்துகிற, பொதுப்புத்தியை குறுக்கீடு செய்யாத, அதிகாரத்திற்குப் பணிந்துபோகிற அல்லது துணை நிற்கிற, வாசக மனதை தொந்தரவு செய்யாத, மறைவிட நமைச்சல்களை சொறிந்து கொடுக்கிற எழுத்துகளை முன்வைக்கும்போது அவர்களைக் கொண்டாடுவது வணிகப் பத்திரிகைகளுக்கும் உவப்பானதே. சாரமற்ற விசயங்களை தன்காலததின் அதிமுக்கியப் பிரச்சினையாக முன்னிறுத்தி எழுதி மெய்யான பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பவும்கூட இந்த எழுத்தாளுமைகள் தயங்குவதில்லை. **– ஆதவன் தீட்சண்யா**

சீரழிவில் பங்குபெற மறுக்கும் சுதந்திரச் சிந்தனையாளர்களின் குரல், தமிழ் வாழ்வின் பெருங்குரலாக ஒலிக்காத காலம் வரையிலும், தமிழ் வாழ்வின் இன்றைய அவலத்தைச் சாதாரண மக்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும். **– சுந்தர ராமசாமி**

நாம் யோசிக்கக் கற்றுக்கொண்டு விட்டோம். ஆகவே அந்த வித்தையைப் பிரயோகிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் நாம் யோசித்தாலும் யோசிக்காவிட்டாலும் வாழ்க்கை ஒவ்வொரு கணமும் கழிந்து கொண்டே இருக்கிறது. சிந்தனைகள் நமக்கு நாமே கூறிக்கொள்ளும் ஒருவகை சமாதானங்கள்தான். உன் பாதையில் ஏற்பட்ட தோல்விக்கு காரணம் கற்பிப்பதற்காக, நீ பாதையே தவறு எனற ரீதியில் சிந்திக்கத் தொடங்குகிறாய். இந்தச் சிந்தனை உனக்கு இதமாக இருக்கிறது. ஏனென்றால், உன் பொறுப்புகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. **– ஆதவன்**

என்னுடைய உண்மை வெளிவந்து விடாதிருக்க வேண்டுமென்றால் பிறருடைய உண்மைகளை நான் வெளிக் கொண்டு வரலாகாது – இந்தப் பரஸ்பர அன்பிலேயே சமூகநீதிகள் நிலைத்திருப்பதை யார் மறுக்க முடியும்?

**– இந்திரா பார்த்தசாரதி**

மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. எனக்கு நான் சரியானவனாக நடந்து கொள்கிறேன் அது போதும் என்றும் சொல்லிக்கொள்ள முடியவில்லை. நான், சரியானவரில்லை எனறு கருதுகிற நபர் கூட மனப்பூர்வ மாக இதைச் சொல்லிக் கொள்வதைக் கேட்கிறேன். **– கென்**

அனைத்து மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டுள்ளார்கள். சில முக்கிய உரிமைகளைக் கடவுள் மக்களிடம் கையளித்துள்ளார். உயிர்வாழ்தல், விடுதலை, மகிழ்ச்சி ஆகியவை அவற்றில் சில. **– அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில்**

வித்தியாசங்களை – சிறு அடையாளங்களை அங்கீகரித்தல், சாராம்ச – அடிப்படை வாதங்களின் ஆபத்துக்களை உணர்தல், பெருங்கதையாடல்களின் வன்முறை களைப் பற்றிய பிரக்ஞை கொண்டிருத்தல் என்கிற அம்சங்கள் இன்றைய பாசிசச் சூழலை எதிர்கொள்ளப் பயன்படும்என்று நாங்கள் நினைக்கிறோம், அவ்வளவுதான். **– பிரேம்–ரமேஷ்**

கலாசாரக் கலப்பு என்பது தவிர்க்க இயலாத ஒன்று. வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. கலாசாரத் தூய்மை என்பதே ஆபத்தானது. பாசிச உருவாக்கத்திற்கு, பல்வேறு இன அழிப்புகளுக்கும் இந்தத் தூய்மைவாதமே காரணமாக உள்ளது.

**– அ.மார்க்ஸ்**

தத்துவம் ஒவ்வொன்றும் கோடரிதான். ஒவ்வொரு வழிகாட்டு நெறிமுறையும் கடைசியில் மற்றவர்களைக் கொலை செய்யவே பயன்படுவதைப் பார்த்து வருகிறோம்.

**– பிரமிள்**

இன்னும் என் குழந்தைப்பருவப் புகைப்படத்தை வைத்துக் கொண்டு என்னை யாரும் கொஞ்சுவதில்லையே என்று ஏங்கும் முட்டாள்தனம்தான் தோல்வி. **– டீன் கில்மோர்**

அந்தக் கதவருகே எல்லாக் கேள்விகளுக்கும் பதில் உண்டு. ஆனால் கேள்விகள் இருக்கும் வரை கதவு திறக்காது. பதில்கள் நிறைந்த உட்புறம் போனபின் கேள்விகளாலான வெளிப்புறம் இருக்காது. **– சைதன்யா**

ஒரு விழிப்புற்ற துறவி யாருடனும் கருத்து ஒன்றுபடவோ, கருத்து மாறுபடவோ மாட்டார். உலகத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அத்துடன் தன்னைப் பிணைத்துக் கொள்ளாமல் செல்வார்.

**– புத்தர்**

யாருக்கும் காட்டப் போவதில்லை, ஆனாலும் டயரி எழுதுவது ஏன்? நாளை மீண்டும் பார்க்கத்தானே? பதிவானபோது இருந்தவனும், பதிவு செய்தவனும், பதிவினைப் படிப்பவனும் ஒரே உடலில் இருந்தாலும் ஒன்றா? **– நகுலன்**

# வடமாகாண சபைத் தேர்தல் தனிஈழம் மலர வழிவகுக்கும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



(கொழும்பு)

தனிஈழம் மலர்வதற்கு வடமாகாணசபைத் தேர்தல் நிச்சயம் வழிவகுக்கும். எனவே, வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதைவிட தனி ஈழத்தை வழங்கிவிடலாம். தனி ஈழத்தை அமைப்பதற்கு மேற்குலகம் வடமாகாண சபைத் தேர்தல் என்ற பொறியைப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. எனவே, அரசு அதில் சிக்கக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்தல் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தினால் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படும். அது பின்னர், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அதனால்தான் 13 ஐ இரத்துச் செய்யுமாறு நாம் கோருகின்றோம்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதன் அதிகாரங்கள் தீய சக்தியிடம் செல்லும். அந்தச் சக்தியைப் பயன்படுத்தி புலி ஆதரவாளர்களுடன் இணைந்து தனி ஈழத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பர். எனவே, வடமாகாண சபைத் தேர்தலை தற்போதைய சூழ்நிலையில் அரசு நடத்தக்கூடாது. வடக்குத் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமளிக்கவும்கூடாது.

வடக்குத் தேர்தலை நடத்துமாறு மேற்குலக நாடுகள் வலியுறுத்து கின்றன. அந்நாடுகளின் உள்நோக்கம் என்ன வென்பதை நாம் அறி வோம். அதனால் மேற் குலகம் விரிக்கும் வலை யில் அரசு ஒருபோதும் சிக்கக்கூடாது.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவது தனி ஈழத்தை தாரைவார்ப்பதற்குச் சமனான செயலாகும். எனவே, அரசு இந்த விடயத்தில் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

தேசத்துரோகமான நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சம்பந்தனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி சட்டமா அதிபருக்கும், சபா நாயகருக்கும் கடிதம் அனுப்பவுள்ளேன் எனறார்.

# கிழக்கு மாகாண சபை கலைப்பதைத் தடுக்க மனு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைய முன்னர் அதனைக் கலைப்பதைத் தடுப்பதற்கான உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை - திம்பிரிகல கே.கே.பீ.ரங்கன அமரசிங்க என்பவர் சார்பாக சட்டத்தரணி மொஹான் பாலேந்திர மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், மாகாண சபை அமைச்சர்கள் ஆகியோர் மனுவில பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சபையை அதன் காலம் முடிவடையும் வரை கலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாகாண சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அதற்கு முதலமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாண சபையைக் கலைப்பதனைத் தடுப்பதற்காக உத்தரவொன்றை விடுக்குமாறு மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# எட்டு இலட்சம் கண்ணிகள் வடக்கு, கிழக்கில் அகற்றல்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து எட்டு இலட்சத்திற்கும் அதிகமான மிதிவெடிகள் இராணுவத்தால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 122 சதுர கிலோமீற்றர் பரப்பில் மாத்திரமே மிதி வெடிகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்

மீள் குடியேற்றம் முழுமையடைந்துள்ளது. இன்னும் சிறு பகுதியினரே மீள் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர். இவர்களையும் மிக விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தி விடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.


இது குறித்து இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறுகையில்,

2061 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் புலிகளால் மிகவும் ஆபத்தான மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. இதனை இராணுவம் ஏனையோரின் உதவியுடன் முழு அளவில் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளாக முன்னெடுத்தது.

இதன் பிரகாரம் சுமார் 1438 கிலோமீற்றர் பரப்பில் மிதி வெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 122 சதுர கிலோமீற்றிலும் மிக விரைவில் மிதி வெடிகளை அப்புறப்படுத்தி விடுவோம்.

மிதி வெடிகளை அப்புறப்படுத்துவது என்பது சவால் மிக்க விடயமாகும். மிதிவெடிகளை உபயோகிப்பதாயின் அதற்கு சர்வதேச விதிமுறைகள் உள்ளது.

ஆனால், புலிகள் அதனையும் மீறியே மிதிவெடிகளை உபயோகித்துள்ளனர். எவ்வாறாயினும் பாதுகாப்பை உறுதிப்படுத்தாது மக்களை அப்பிரதேசங்களில் மீள் குடியமர்த்த முடியாது என்றார்.



காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது தூபிக்கு குடமுழுக்கு நடைபெறுவதைக் காணலாம். (50)

# வவுனியாவில் ஆசிரியர்களுக்கு எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு



(வவுனியா)

வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களுக்கு எயிட்ஸ் தடுப்பு, போசாக்கு, சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சுமார் 40 ஆசிரியர்கள் முதற்கட்டமாக கலந்துகொண்டனர். இதன்போது எயிட்ஸ் நோயினை தடுப்பதற்கான வழிவகைகள், ஆரோக்கியமான வாழ்விற்கான போசாக்குணவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரத்தின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துக்கள் வழங்கப்பட்டிருந்தன.

இச் செயலமர்வில் வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் பொ.சண்முகதேவன், விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் இ.மாதவன, விஞ்ஞான வள கற்கை நிலைய முகாமையாளர் அ. ஜெயகீசன், மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகர் திருமதி மா.புலேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கியிருந்தனர். (160)

# வைத்தியசாலையில் 400 ரூபா திருட்டு

(திருநெல்வேலி)

நாநூறு ரூபா பணம் திருடிய வாலிபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் பத்தாயிரம் ரூபாவுக்கான ஆட்பிணை வழங்கியது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவரிடமிருந்து கடந்த 3 ஆம் திகதி 29 வயதுடைய இநநபர் அகப்பட்டுக் கொண்டார். நானூறு ரூபா பணத்தைத் திருடியபோது இவரைக் கைது செய்த யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்டபோது 10 ஆயிரம் ரூபாவுக்கான 2 ஆட்பிணையில் செல்வதற்கு நீதிவான் இவரை அனுமதித்து வழக்கை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

# கொழும்பில் காணாமற்போன 5 இளைஞர்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17 ஆம் திகதி இரவு கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் 5 இளைஞர்கள் காணாமல் போனமை சம்பந்தமான வழக்கின் சாட்சியங்களை. விசாரிக்கும் நடவடிக்கைகள கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

காணாமற்போன இளைஞர்களின் உறவினர்கள் தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த பின்னர், இது சம்பந்தமாக சாட்சியங்களை விசாரிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த உத்தரவிற்கு அமைய சாட்சியங்களை விசாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது சாட்சியமளித்த காணாமற்போன இளைஞர் ஒருவரின் தாய், தனது மகனை, விமானப்படையைச் சேர்ந்த சம்பந்த முனசிங்க, கேணல் ஹெட்டியாராச்சி ஆகியோர் கடத்திச் சென்றதாக தனக்கு அறிய கிடைத்ததாகத தெரிவித்தார்.

காணாமற்போன தனது மகன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னை திருகோணமலை துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளதாக அறியத் தந்ததாகவும் பின்னர் அவர் பற்றி எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த சாட்சியாளர், தொலைபேசியில் பேசிய நபர் ஒருவர் தனது மகனை விடுவிக்க 10 இலட்சம் ரூபா பணத்தை கேட்டதாகவும் கூறியுள்ளார். சாட்சியாளர் சார்பில் சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜரானதுடன் சட்டமா அதிபர் சார்பில் அரசாங்கத்தின் சிரேஷட சட்டத் தரணி கயந்த விஜேசூரிய ஆஜரானார். மேலதிக சாட்சியங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி பதிவு செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் அனைத்து சாட்சியாளர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# பள்ளி மாணவன் கடத்தல் வழக்கு சந்தேக நபருக்கு பிணை நிராகரிப்பு

(திருநெல்வேலி)

சணடிலிப்பாயில் கடத்தப்பட்ட பாடசாலை சிறுவன் சம்பந்தமான வழக்கில் தொடர்புபட்ட மூன்றாவது சந்தேக நபருக்கான பிணை மல்லாகம் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது சந்தேக நபர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், சட்டத்தரணி பார்த்தீபன் ஆகியோர் சந்தேக நபரைப் பிணையில விடுமாறும் அவர் தலைமறைவாக மாட்டார் என்றும், யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருப்பார் எனவும் சமர்ப்பித்து வாதாடினர்.

இதனைப் பாதிக்கப்பட்ட சிறுவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் கடுமையாக ஆட்சேபித்தார். இவரைப் பிணையில் விடுவதால் ஏற்படும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டியதுடன், யாழ்ப்பாணத்தில் இவர் தங்கியிருப்பதால் உள்ள பாதிப்புக்களையும் எடுத்துக்காட்டி பிணை வழங்குவதை எதிர்த்து வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த மல்லாகம் நீதிவான் கே.ஜீவராணி சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயார் நீதிமன்றில் சமுகமளித்திருந்தார். (137)

07. 'மிதிபலகையில் நின்று பயணம் செய்தல் கூடாது' என்ற அறிவிப்பை பின்வரும் எந்த போக்குவரத்து சாதனத்தில் காணமுடியும்?



(1) (2) (3) (4)

08. பௌர்ணமி தினத்தில் வானத்தில் சந்திரன் தோன்றும் பொழுது அதன் வடிவம் பின்வருவனவற்றில் எவ்வடிவினை உடையதாக இருக்கும்?



(1) (2) (3) (4)

09. கீழே தரப்பட்டுள்ள நான்கு உருக்களில் உலர்மின்கலம் ஒன்றில் நேர், மறை குறியீடுகள் சரியான முறையில் குறிக்கப்பட்டுள்ள உரு எது?



(1) (2) (3) (4)

10. பின்வரும் வினாவில் மின்குமிழை ஒளிரச் செய்யத்தக்க நான்கு உருக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் எந்த உருவில் மின்குமிழ் ஒளிராது.



(2) (3) (4)

11. எ பில் நான்கு மெழுகுதிரிகள் கீழே உருக்களில் காட்டப்பட்டவாறு கண்ணாடிப்பாத்திரங்கள் மூடப்பட்டுள்ளது. இவற்றில் முதலில் அணையக்கூடிய மெழுகுதிரியைக் கொண்ட உரு எது?



(1) (2) (3) (4)

12. அலங்காரத்திற்கு உதவும் தையல் எது?
1) சோம் தையல் 2) கம்பிளித்தையல் 3) சிறு நூலோடி

13. கண்கள், காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறும் ஊடகங்களில் ஒன்று
1) தொலைக்காட்சி 2) வானொலி 3) பத்திரிகை

14. பின்வருவனவற்றுள் விரைவில் அணையக் கூடிய மெழுகுதிரி எது?




(1) (2) (3)

15. பின்வருவனவற்றுள் சுவரின் நிலைக்குத்தைப் பார்க்க உதவுவது எது?
1) சாந்தகப்பை 2) தூக்குக்குண்டு 3) நீர் மட்டம்

16. துடுப்பாட்டத்தில் ஒரு அணியில் பங்குகொள்ளும் வீரர்கள் எத்தனை பேர்?
1) 11 2) 16 3) 7





T.S. கஜன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 82



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பின்வரும் பந்தியை நன்கு வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

கடற்கரையில் சிறுவர்கள் தம்மை மறந்து விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். சிறுவர்கள் விளையாடும் காட்சியை பெற்றோர்கள் ரசித்துக் கொண்டு இருக்கின்றார்கள். சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றது. பறவைகள் கூட்டங்கூட்டமாக தமது இருப்பிடத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கின்றன. கடல் அமைதியாகக் காட்சி தருகின்றது. இன்று அலைகள் பொங்கி எழவில்லை. கடல் அலைகள் இன்று ஏன் பொங்கி எழவில்லை? எனக்குக் காரணம் புரியவில்லை.

01. பந்தியிலுள்ள அடுக்குத் தொடரினை எழுதுக.

..............................................................................................

02. ஒத்த கருத்துச் சொல் தருக.
1. கடல் .................................... 2. பறவை ....................................

03. எதிர்க் கருத்துச் சொல் தருக.
1. அமைதி .................................... 2. மறைந்தது ....................................

04. கடற்கரையில் சிறுவர்கள் தம்மை மறந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதில் உள்ள எழுவாய் யாது?.

..............................................................................................

05. "இருக்கிறார்கள்" என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..............................................................................................

06. பெயராகவும், பலர்பாலாகவும், உயர்திணையாகவும் வந்துள்ள சொல் எது?

..............................................................................................

07. பறவைகள் ஏன் இருப்பிடங்களை அமைத்துக் கொள்கின்றன?

..............................................................................................

08. தாய் தந்தையரைக் குறிக்கும் பந்தியில் உள்ள சொல் எது?

..............................................................................................

09. பெற்றோர்கள் என்பதை ஒருமையில் தருக.

..............................................................................................

10. கடற்கரை என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................................................................

**(02) பின்வரும் தொடர்பினை அவதானித்து சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01. வாழை - இலை எனில் கோதுமை

..............................................................................................

02. ஆடு - இடையன் எனில் தேர்
.....................................................................................................

03. கப்பல் - மாலுமி எனில் பேருந்து
.....................................................................................................

04. பரி - குதிரை எனில் கரி
.....................................................................................................

05. குருவி - எச்சம் எனில் எருமை
.....................................................................................................

**(03) பின்வரும் தொடர் மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

01. தன்னைப் பற்றித் தானே எழுதுவது
.....................................................................................................

02. தன்னைத் தானே கொலை செய்து கொள்ளுதல்
.....................................................................................................

**(04) பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

01. உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது. (..........)

02. உலகில் அதிகமாக மக்கள் ஆங்கில மொழியையே பேசுகின்றனர். (..........)

03. ஒன்பதாவது உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகள் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ளது. (..........)

04. முதலில் காகிதத்தை உபயோகித்தவர்கள் சீனர்கள். (..........)

05. திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை. (..........)


**(05) பின்வரும் பூக்களின் பெயர்களை அடைப்பில் இருந்து தெரிந்து எழுதுக.**

(பிறைப்பூ, கார்த்திகைப்பூ, ஓகிட், காசித்தும்பை, அகத்தி)


(1)


(2)


(3)


(4)


(5)

**(06) பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**(மின்பாரம் தூக்கி, மின் தூக்கி, பாரம் சாம்பி, லூயி பாஸ்டர், குறுக்குத் தையல், சோம் தையல், கிறுக்கல் சித்திரம், கொலாஜ் சித்திரம்)**

01. இரேகைகளைப் பயன்படுத்தி எழுந்தமானமாக வரையப்படும் கலைத்துவப் படைப்புக்கள் ................. .................எனப்படும்.

02. இரு துணித்துண்டுகளை ஒன்றன்மீது ஒன்று வைத்துத் தைப்பதற்கு உதவக்கூடியதும், ஆரம்பத் தையல் முறைகளில் ஒன்றாகக் கருதக்கூடியதுமான தையல் ..............................தையல் ஆகும்.

03. உயரமான கட்டடங்களிலுள்ள அறைகளுக்குச் செல்ல ..................................... உதவும்.

04. பாரமான பொருட்களை உயர்த்துவதற்கு / மேலே கொண்டு செல்வதற்கு / கிணற்றில் இருந்து நீர் இறைக்க ...............................உதவும்.



05. விசர் நாய்க்கடி தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ..................... ..............ஆவார்.

**07) பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்க் கருத்தைத் தருக.**

01. அபே கெதர ஒறலோகவ தியனவா .................................................................

02. க(த்)தா கறன்ன .................................................................

03. தாத்தா காவத? .................................................................

**08) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

01. கடற்கரை ..............................
03. சூரியன் ..............................
02. சிறுவர்கள் ..............................
04. அதிபர் ..............................

**09) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்க் கருத்தைத் தருக.**

01. Today ..............................
03. Teacher ..............................
02. Birds ..............................

**10) மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஒரு பாடசாலையின் அபிவிருக்காக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து அமைக்கும் அமைப்பு

1. ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
3. பழைய மாணவர் சங்கம்
2. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

02. பின்வருவனவற்றில் ஆமையின் விரலிடை மென்சவ்வு


1


2


3


4

03. குறைந்த வெளிச்சத்திலும் திறமையாக வேட்டையாடக்கூடிய அதிக மோப்பசக்தி உடைய பிராணி

1. நாய் 2. குரங்கு 3. பூனை 4. தேனீ


04. தச்சுவேலை செய்வோர் தமது ஆயுதங்களின் கூர்த்தன்மையைப் பேணும் விதம்


1. மூடி வைத்தல்
3. எண்ணெய் இட்டு வைத்தல்
2. பாவிக்காது வைத்தல்
4. நன்றாகக் கூராக்குதல்

05. பின்வருவனவற்றில் உடலை நோயிலிருந்து பாதுகாக்க உதவும் கூறு

1. கனியுப்பு 2. புரதம் 3. கொழுப்பு 4. மாச்சத்து

06. அரச இலட்சினையில் உள்ள பின்வரும் அடையாளங்களில் நிறை கலசத்தைக் குறிப்பது


(1)


(2)


(3)


(4)

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? கூட்டணி கட்சிகளுக்குள் குழப்பம்

ஜனாதிபதி தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர் யார்? என்பது இதுவரை முடிவு செய்யப்படவில்லை. இதுகுறித்து காங்கிரஸ் கட்சி தனது கூட்டணி கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டணிக் கட்சியான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜியை புதுடில்லிக்கு வரும்படி காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி அழைப்பு விடுத்திருந்தார்.

இதனையடுத்து அங்குசென்ற மம்தா காங்கிரஸ் பொது செயலாளர் சோனியா காந்தியை புதுடில்லியில் சந்தித்தார். இவர்களது சந்திப்பு 3 மணி நேரம் நீடித்தது.

இச்சந்திப்பின் போது தற்போதைய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியை காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்த அக்கட்சி திட்டமிட்டிருப்பதும், தற்போதைய துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி இப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது குறித்தும் காங்கிரஸ் தனது நிலையை விளக்கிக் கூறியுள்ளது.

சோனியாவிடம் இதற்கு பதிலளித்த மம்தா, சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவை சந்தித்து பேசிய பிறகே திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நிலை குறித்து தெரிய வரும் என்று பதிலளித்து விட்டு, முலாயம் சிங்கை சந்தித்தார் மம்தா.

இவர்களது சந்திப்பு சுமார் ஒருமணி நேரம் நீடித்தது. இச்சந்திப்பிற்குப் பின் இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது பத்திரிகையாளர்களிடம் அவர்களிருவரும், தெரிவிக்கையில்

காங்கிரஸ் கட்சியின் பரிசீலனையில் உள்ள வேட்பாளர்களைக் குறித்து நாங்கள் விவாதிக்கவில்லை. நாங்கள் இப்பதவிக்கு பொருத்தமானவர் யார் என்பது குறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.


அதன்படி எங்களது முதல் விருப்ப வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இருக்கிறார். இரண்டாவது விருப்பத்தில் பிரதமர் மன்மோகன் சிங் இருக்கிறார்.

மூன்றாவது விருப்பத்தில் முன்னாள் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி இருக்கிறார். இவர்களைத்தான் நாங்கள் ஜனாதிபதி வேட்பாளர்களாக முன்மொழிகிறோம் என்று கூறினர்.

காங்கிரஸ் கட்சி தேர்வு செய்த வேட்பாளர்களை விடுத்து, புது வேட்பாளர்களை திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தேர்வு செய்திருப்பது புதுடில்லி வட்டார அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி பதவிக்கு நிறுத்தலாம் என்ற மம்தா பானர்ஜி, முலாயம் சிங் யாதவின் கோரிக்கையை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நிராகரித்துவிட்டதாகத் தகவல்கள் வருகின்றன.

# கருணாநிதியை வீழ்த்த முடியாது



தி.மு.க தலைவர் கருணாநிதியை யாராலும் வீழ்த்த முடியாது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா கூறியுள்ளார்.

திருவாரூர் தெற்கு வீதியில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் மந்திய அமைச்சர் ஆ. ராசா கலந்து கொண்டு பேசினார்.

இந்திய அரசியல் சாசனத்தில் இறையாண்மை, சமதர்மம், குடியரசு, மதசார்பின்மை ஆகியவை வகுக்கப்பட்டுள்ளது. இந்த 4 காரணிகளுக்கும் பெருமை சேர்ப்பவர் கருணாநிதி. இந்திய இறையாண்மைக்கு ஆபத்து வரும் போது அதனை காப்பாற்றியவர் கருணாநிதி.

பூலோகத்தில் திருவாரூர் என்ற சிறிய நகரத்தில் கருணாநிதியை அடைத்து வைக்க முடியாது. அவரை யாரும் வீழ்த்த முடியாது. தமிழகத்தில் சமச்சீர் கல்வி, அண்ணா நூலகம் ஆகியவை தி.மு.க.வினால் கொண்டு வரப்பட்டது என்பதற்காக இந்த அரசு அழிக்க நினைக்கிறது.

அது நிறைவேறாது. சில மனிதர்கள் சிலவற்றை சாதுர்யமாகச் செய்வார்கள். அது கருணாநிதிக்கு பொருத்தமாகும் என்றார்.

# ராமஜெயம் கொலை வழக்கு இலங்கையிலும் விசாரணை



முன்னாள் அமைச்சர் கே.என். நேருவின் சகோதரர் ராமஜெயம் கொலை வழக்கில் இலங்கை பிரமுகர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாக தெரியவர தனிப்படை அணி இலங்கைக்கு வந்துள்ளது.

ராமஜெயம் கொலை செய்யப்பட்டு பல மாதங்கள் சென்றுள்ள நிலையில் இன்னமும் கொலையாளி யார் என்பது தெரியவில்லை. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த அனைத்து தனிப்படைகளும் கலைக்கப்பட்டு புதிய அணிகள் உருவாக்கப்பட்டன.


இதில் ராமஜெயத்துக்கு நெருக்கமான வினோத் மற்றும் கண்ணன் ஆகியோரிடம் தொடர்ந்து ஒரு அணி விசாரணை நடத்தி வருகிறது. அதே நேரத்தில் இன்னொரு அணி இலங்கைக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது.

ராமஜெயத்தின் மிகவும் நம்பிக்கைக்குரிய நபர் அவரிடம் இருந்து ரூபா 300 கோடி அளவுக்கு கையகப்படுத்தியுள்ளார் இதைத் தெரிந்த ராமஜெயம் பலரது முன்னிலையில் அந்த நபரை நையப் புடைத்திருக்கிறார். அந்த நபர், இலங்கையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவருக்கும் நெருக்கமானவராம். அந்த பிரமுகரும் இந்தியாவின் பிற மாநிலங்களில் இருக்கும் தமக்கு தெரிந்த ஆட்களை வைத்து ராமஜெயத்தினைக் கொலை செய்திருப்பதாகக் கதையை முடித்திருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து தனிப்படை அணி ஒன்று இலங்கை வந்துள்ளது.

இலங்கையிலிருந்து தனிப்படை அணி தமிழகம் திரும்பும்போது அதிர்ச்சியடைய வைக்கும் பல தகவல்கள் வெளியாகக் கூடும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது

# மும்பை தாக்குதல் மூளைகளின் வழக்கினை விரைவில் நடத்துக


## அமெரிக்காவிடம் கோரியது இந்தியா



(வொஷிங்டன்)

கொடூரமான மும்பைத் தாக்குதலின் மூளையாகச் செயற்பட்ட ஹெட்லி மற்றும் ராணா ஆகியோர் மீதான வழக்கினை விரைவில் நடந்த வேண்டும் என்று அமெரிக்காவிற்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியா மற்றும் அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செயலாளர்களின் பேச்சுவார்த்தையில் ஹிலாரி கிளிண்டனை சந்தித்து பேசி விட்டு, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார் எஸ்.எம். கிருஷ்ணா.

இதில், இரு தரப்பிலும் அணு சக்தி ஒப்பந்தம் உள்ளிட்ட மூன்றாவது கட்ட முக்கிய பேச்சுவார்த்தை நடந்தது. பின்னர், கடந்த 2008ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளான லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தை சேர்ந்த டேவிட் ஹெட்லி மற்றும் அவரது கூட்டாளி தஹாவூர் ராணா ஆகியோர் தொடர்பான தகவல்களை அளிக்கும்படி அமெரிக்காவை கேட்டு கொண்டுள்ளதாகவும், அதற்கு கிளிண்டன் உறுதியளித்துள்ளார் என்றும் எஸ்.எம். கிருஷ்ணா கூறினார்.




# நித்தியானந்தாவின் ஆச்சிரமத்தில் ஆபாசப்படங்கள், கஞ்சா பொட்டலங்கள்!

- அதிர்ச்சியில் பொலிஸார் -

நித்தியானந்தாவின் பிடதி ஆசிரமத்தில் அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். ஆசிரமத்தின் அறைகளில் குவித்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொட்டலங்கள், நடிகைகளின் கவர்ச்சி படங்கள், ஆபாச புத்தகங்களை பார்த்து பொலிஸாரும் அதிகாரிகளும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஆசிரமத்தில் ராஜ்ஜிய சபா, ஆனந்த சபா, தியான சபா என தனித்தனியாக மூன்று கட்டடங்கள் உள்ளன. அதில் ஏராளமான அறைகள் இருக்கிறது. ஒவ்வொரு அறையாக அதிகாரிகள் உள்ளே சென்று சோதனை நடத்தினர். இதுதவிர நித்யா குடிர் என்ற கட்டடத்திலும் சோதனை நடந்தது. இந்த சோதனையின்போது விலை உயர்ந்த வெள்ளி மற்றும் தங்கத்தால் செய்த சூலம், வெள்ளி குடம், தங்கத்தாமரை தட்டு, தங்க முலாம் பூசப்பட்ட வாள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

ஆசிரம வளாகத்தில் உள்ள இன்னொரு கட்டடத்துக்கு சென்ற அதிகாரிகள், அங்கிருந்த ஒவ்வொரு அறையையும் திறந்து பார்த்தபோது அதிர்ச்சி அடைந்தனர். ஒரு அறையில் கஞ்சா பொட்டலங்கள், ஆணுறைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

# நித்தியானந்தா சிறை; மதுரை ஆதீனம் விரக்தி!

(மதுரை)



நித்தியானந்தா கைதாகி சிறைக்குப் போய் விட்டதால் மதுரை ஆதீனம் விரக்தியுடனும், அதிர்ச்சியுடனும் உள்ளார். இதுகுறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது, என்னைத்தைச் சொல்ல, பொறுமையாக இருப்போம் என்று பதிலளித்துள்ளார். மேலும், இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட ஒருவரை நீக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாகவும் அவர் பூடகமாக கூறியிருப்பது அவர் நித்தியானந்தாவை நீக்கும் முடிவை எடுக்கலாம் என்று மறைமுகமாகக் கூறுவதாக கருதப்படுகிறது.

நித்தியானந்தாவின் 2ஆவது கைது படலம் பெங்களூர் அருகே ராமநகரத்தில் நேற்று முன்தினம் நடந்தேறியது. அவரை ஒரு நாள் சிறைக் காவலுக்கு நீதிமன்றம் அனுப்பி விட்டது. இந்தத் தகவல்கள் மதுரை ஆதீனத்தை அதிர்ச்சியுற வைத்துள்ளது. இதனால் அவர் சரியாக உணவருந்தாமல், விரக்தியுடன் காணப்படுகிறார்.

# இலவச திருமணங்கள் கின்னஸில் முதல்வர் 'ஜெ'

(சென்னை)

உலகிலேயே அ.தி.க இலவச திருமணங்களை நடத்தி வைத்தவர் என்பதால் தமிழக முதல்வர் ஜெயலலிதா கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போகின்றார்.

தமிழக இந்து அறநிலையத்துறை சார்பில் வரும் 18ஆம் திகதி 1,006 ஜோடிகளுக்கு இலவசமாக திருமணம் நடத்தி வைக்க முடிவு செய்யப்பட்டது

கடந்த 2002ஆம் ஆண்டு 1,008 ஜோடிகளுக்கும், 2003ஆம் ஆண்டு 1,053 ஜோடிகளுக்கும், 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை 2500இற்கும் மேற்பட்ட ஜோடிகளுக்கும், முதல்வர் ஜெயலலிதா இலவச திருமணங்களை நடத்தி வைத்துள்ளார்.

உலகிலேயே அதிக இலவச திருமணங்களை நடத்தி வைத்தவர் என்ற பெருமையை தமிழக முதல்வர் ஜெயலலிதா பெற்றுள்ளார். இதனால் அவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போகின்றார்.

# அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் தயாரிக்கவுள்ளது ஈரான்


(தெஹ்ரான்)

அணு உலையைத் தொடர்ந்து அணுசக்தி நீர்மூழ்கி கப்பலைத் தயாரிக்கும் பணியில் ஈரான் ஈடுபட்டுள்ளது.

சர்வதே எதிர்ப்பையும் மீறி ஈரான் அண்மையில் அணு உலையை உருவாக்கியது. இதன் மூலம் அணு குண்டுகளை தயாரிப்பதாக புகார் எழுந்துள்ளது. இந்தப் பிரச்சினையால் ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது.

இந்த நிலையில் தற்போது ஈரான் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஈரானிடம் தற்போது 23 நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளன. இவற்றுடன் அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை சேர்ப்பதற்காக அணுசக்தி இயந்திரத்தை உருவாக்க உள்ளது.


இதுதொடர்பாக ஈரானிய கடற்படை தளபதி அப்பாஸ் சாமினி கூறும்போது, ஈரான் அணு சக்தியை ஆக்க பூர்வ பணிக்கு மட்டுமே பயன்படுத்துகிறோம். மின் உற்பத்தி, விவசாயம், மருந்து தயாரிப்பு போன்றவற்றுக்கு மட்டும் அணு



சக்தி பயன்படுத்தப்படுகிறது.

இதுதவிர அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் இயந்திரத்தை தயாரிக்க உள்ளோம். இது அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும். 18 ஆயிரம் 750 தொன் எடை கொண்ட கப்பலை இயக்கும் திறன் கொண்டதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். ஈரான அணுசக்தி கப்பலை தயாரிப்பது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# நிதி நெருக்கடியின் எதிரொலி நோபல் பரிசுத் தொகை குறைப்பு



உலக அளவில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்குவோருக்கு கடந்த 1901 ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும் நோபல் பரிசு பெறுபவருக்கு, 6.4 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் அண்மைக்காலமாக ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக நோபல் பரிசின் ரொக்கத் தொகைகுறைக்கப்பட உள்ளது. தற்போது ஐரோப்பிய நாடுகளில் நிலவி வரும் நிதி நெருக்கடி காரணமாக ஆட்குறைப்பு, ஊதியம் மற்றும் ஓய்வூதியக் குறைப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போதைய சூழலில் நோபல் பரிசுடன், 6.4 கோடி ரூபாய் பரிசுத்தொகை அளிக்க வேண்டுமா என்பது குறித்து, நோபல் பரிசுக் குழு கூடி ஆலோசனை நடத்தியது. ஆலோசனையின் முடிவில், தற்போதைய பரிசு தொகையில் 20 சதவீதத்தை குறைக்க இந்தக் குழு முடிவு செய்தது. இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

# பெண்கள் வாழ தகுதியான நாடு; முதலிடம் பிடித்தது கனடா

(கனடா)

பெண்கள் வாழ தகுதியான நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஜி - 20 நாடுகளில் கனடா முதலிடத்தைப் பெறுவதற்கு காரணம், பெண்களின் வன்முறைக்கு எதிரான நடவடிக்கைகள், பெண்களின் சுகாதாரத்தைப் பேணும் திட்டங்கள் சிறப்பாக இருப்பதே ஆகும்.

கனடாவைத் தொடர்ந்து ஜேர்மனி, பிரிட்டன், அவுஸ்ரேலியா, பிரான்ஸ் ஆகியன முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாலியல் தொழிலுக்காக விற்றல், குழந்தை திருமணம், வரதட்சணை கொடுமை, வீட்டுப் பணிப்பெண்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாவது போன்ற காரணங்களால் பெண்கள் வாழ தகுதியான நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு கடைசி இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவுக்கு முன்னதாக உள்ள இடங்களில் சவுதி அரேபியா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா, மெக்சிகோ ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

உலகச் செய்திகள்

# ஐரோப்பிய நாடுகளுக்கு ஆங் சான் சூகி பயணம்



(மியன்மார்)

மியன்மாரின் ஜனநாயக செயற்பாட்டாளர் ஆங் சான் சூகி ஐரோப்பிய நாடுகளுக்கான இரண்டு வார விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக ஜெனிவாவை சென்றடைந்துள்ள அவர் ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்தவுள்ளதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 24 ஆண்டுகளில் பெரும்பாலான காலத்தை வீட்டுக் காவலில் ஆங் சான் சூகி கழித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1988 ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் முறையாக ஐரோப்பாவுக்கு அவர் மேற்கொண்டுள்ள இந்த விஜயம் நாட்டின் அரசியல் நடவடிக்கையில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகின்றது.

இந்த விஜயத்தில் பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

1991 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சமாதானத்திற்கு நோபல பரிசினையும் அவர் ஏற்றுக் கொள்வார் என பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

தமது நாட்டின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர்களின் பின்னடைவான மனித உரிமை விடயங்கள் குறித்து ஐ.நாவின் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் உரையில் அவர் சுட்டிக்காட்டலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# குற்றவியல் நீதிமன்றக் குழு லிபியாவுக்கு சென்றது

(திரிபோலி)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் லிபியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

லிபியாவில் தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளை, இதன் போது அவர்கள் சந்தித்துள்ளனர்.

எனினும் இந்தச் சட்டத்தரணிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு விடயம் என சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கைதுசெய்யப்பட்டவர்களை 45 நாட்களுக்கு தொடர்ந்து தடுத்து வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவின் முன்னாள் தலைவர் முவம்மர் கடாபியின் புதல்வர் ஒருவர் தொடர்பான ஆவணங்கள் குறித்து எழுந்த சந்தேகங்களை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.


# ஏவுகணை செலுத்தும் வாகனம்; வடகொரியாவிற்கு வழங்கிய சீனா

(டோக்கியோ)

ஐக்கிய நாடுகள் சபையின் தடை இருந்த போதிலும் அதையும் மீறி வட கொரியாவுக்கு ஏவுகணை செலுத்து வாகனத்தை சீனா ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த விடயம் அமெரிக்காவுக்குத் தெரிந்த போதிலும், அனாவசியமாக சீனாவை எரிச்சலூட்ட விரும்பாததால் இத்தகவல் தெரிவிக்கப்படவில்லை என்று ஜப்பானிய நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பானிய அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இதிலிருந்தே வட கொரியாவுக்கு சீனா உதவி செய்தது புலனாகியுள்ளது என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நான்கு லொறிகள் நிறைய ஏவுகணை செலுத்தும் வாகனங்கள் சீனாவிலிருந்து



வட கொரியாவுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

வட கொரியா நிறுவனர் கிம்-2 சுங்கின் நூற்றாண்டு பிறந்தநாளில் வட கொரியா நிகழ்த்திய இராணுவ அணிவகுப்பில் சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட வாகனங்கள் இடம்பெற்றிருந்ததாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் தடையை மீறி ஏவுகணை செலுத்து வாகனத்தை சீனா அனுப்பியுள்ளது. அணுகுண்டு தயாரிப்பில் வட கொரியா ஈடுபடுவதாகக் கூறி அந்நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை தடை விதித்திருந்தது.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி சீனாவிலிருந்து 16 சக்கரங்கள் கொண்ட வாகனம் கம்போடியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பலில் ஏற்றபபட்டதை உளவு செயற்கைக்கோள் படம் பிடித்துள்ளது. இந்த கப்பல் ஒசாகா வழியாக சென்றபோது, ஜப்பானிய கடலோரக் காவல் படை இந்தக் கப்பலை சோதித்துள்ளது.

ஏவுகணை செலுத்து வாகனம் ஒவ்வொன்றும் 21 மீற்றர் (69 அடி) நீளம் கொண்டவை. சீன விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணை நிறுவனம் நான்கு வாகனங்களை இவ்விதம் அனுப்பியுள்ளது தெரியவந்துள்ளது. 16 சக்கரங்கள் கொண்ட வாகனங்களைத்தான் ஏவுகணை ஏவுவதற்கு சீனா பயன்படுத்துகிறது



# டுனீசியா முன்னாள் ஜனாதிபதிக்கு 20 வருட சிறைத்தண்டனைத் தீர்ப்பு

(ரியாத்)

பதவியிலிருந்த காலப்பகுதியில் கலவரத்தை தூண்டியதாகத் தெரிவித்து டுனீசிய முன்னாள் ஜனாதிபதிக்கு அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் 20 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான டுனீசியாவில் ஜனாதிபதியாக இருந்தவர் ஜினே எல் அபிடின் பென் அலி. இவர் பதவியில் இருந்த போது 2010 ஆம் ஆண்டு நாட்டில் பயங்கர கலவரம் மூண்டது. இலஞ்ச ஊழலை எதிர்த்து ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அடக்கு முறையை ஏவினார். இதில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அரசு சார்பில் 78 பேர் பலியானதாகவும் 94 பேர் காயம் அடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி போராட்டம் வலுத்ததால் ஜனாதிபதி பதவி விலகினார். பின்னர் நாட்டை விட்டு வெளியேறி சவுதி அரேபியாவுக்கு தப்பி ஓடினார். அந்நாடு அவருக்கு அடைக்கலம் கொடுத்தது. தப்பி ஓடிய முன்னாள் ஜனாதிபதி பென் அலி மீது இராணுவ நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. கலவரத்தை தூண்டியதாகவும் நூற்றுக் கணக்கானவர்களை கொன்று குவித்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் பென் அலி க்கு 20 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்து தீர்ப்பு கூறியது. அவர் சவுதிஅரேபியாவில் தஞ்சம் அடைந்து இருப்பதால் தண்டனையை நிறைவேற்றுவதற்காக தங்களிடம் ஒப்படைக்குமாறு டுனீசிய அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# ஆரம்பப் பாடசாலைக்கு அடிக்கல் அக்கராயனில் வைபவம்



(கிளிநொச்சி)

ஆயிரம் பாடசாலைகள் திட்டங்களின் கீழ் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்திலிருந்து பிரிக்கப்பட்ட அக்கராயன் ஆரம்ப வித்தியாலத்திற்கு நேற்று புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 26 இலட்சம் ரூபா செலவில் ஜப்பான் நிப்பொன் திட்டத்தின் கீழ் 60 அடி நீளமும் 27 அடி அகலமும் கொண்ட கட்டடமாக இது அமையவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரின் மக்கள் தொடர்பு அதிகாரியும் ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான தவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர், அக்கராயன் பிரதேசத்தின் அபிவிருத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையில் எமது கட்சி பல்வேறு வேலைத்திட்டங்களை முனைனெடுத்துச் செல்கிறது. குறிப்பாக அக்கராயன் பிரதேச பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், அக்கராயன் பிரதேசத்தை தனி உதவி அரச அதிபர் பிரிவாக மாற்றுதல் அதன் மூலம் நிறைவான அபிவிருத்தியினை ஏற்படுத்துதல், இதனைத் தவிர வீதி அபிவிருத்தி மின்சாரம் உள்ளிட்ட விடயங்களிலும் நாம் அதிக கவனம் செலுத்தி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக எமது முழுமையான பங்களிப்பினை செலுத்தி வருகின்றோம்.

அக்கராயன் பிரதேசத்தின் மிக முக்கிய பிரச்சினையான குடிநீர் பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோரின் முயற்சியின் பயனாக பாரியளவிலான குடிநீர் திட்டம் ஒன்று அரசினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான திட்ட மதிப்பீடுகள் கடந்த வாரம் இந்த பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட அரசின் துறைசார் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் இதன் மூலம் இந்தப் பிரதேச மக்களின் நீண்ட நாள் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்ட்டுள்ள அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் அனைத்து அபிவிருத்தியிலும் எமது பங்களிப்பு நிச்சயம் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களான இராமச்சந்திரன், சபாநாயகம், கிளிநொச்சி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் இதயராஜா, சேவாலங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் யோகராஜா நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ரமணதாஸ் மற்றும் கிராம அலுவலர் சபாரட்ணம் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கைதியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, முள்ளியவளை முதலாம் வட்டாரத்தை சேர்ந்த பாஸ்கரன் வனஜன் (வயது - 20) என்பவர் 12.05.2001 இல் ஓமந்தையில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

முகமாலையில் அரச இராணுவ முன்னணி காவலரண்களை தாக்கி இராணுவத்துக்கெதிராக போர் தொடுத்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவருக்கெதிராக இவரால் அளிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சான்றாக இருந்தது. 24.11.2011 இல் யாழ். மேல் நீதிமன்றில் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு.றெமிடியஸ் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயேட்சையாகவும், தன்னிச்சையாகவும் எதிரியினால் வழங்கப்படவில்லை எனவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் பிரசன்னம் இல்லாமல் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டு பெறப்பட்டதாகவும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார்.

விசாரணையை மேற்கொண்ட நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பேரில் அளிக்கப்படவில்லை எனத் தெரிவித்து அதனை நிராகரித்து தீர்ப்பளித்தார்.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார். அரச தரப்பில் அரச சட்டவாதி திருக்குமரன் ஆஜரானார். (137)

## ஆசிரியர்...

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே இவ்வாறு இடமாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களினால் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு முறையிட்டதை இலங்கை ஆசிரியர் அடுத்து சங்கம் மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் செயலாளர்களுடன் கலந்துரையாடிய போதும் சாதகமான தீர்மானம் எதுவும் எடுக்கப்படாததை தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையீடு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (12)

## பணிப்பாளருக்கு...

பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு ஆதரவாக வைத்தியசாலையின் சில தொழிற் சங்கங்களும் ஆதரவு வெளியிட்டிருந்தன.

இந்தப் போராட்டம் குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று பணிப்பாளரும் தெரிவித்த நிலையில் வைத்தியசாலையில் இரு தரப்பிற்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளதையடுத்து வைத்தியசாலை பணிப்பாளருக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# சேவைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மருத்துவர்களின் போராட்டம் காரணமாக அவசர மருத்துவ சேவை தவிர்ந்த ஏனைய வைத்திய சேவைகள் நடைபெறவில்லை.

இதனால் வைத்தியசாலைக்கு வந்த பெருமளவு நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் வைத்தியசாலையில் நோயாளரும் நிரம்பிக் காணப்பட்டனர். (பா)

## ஐ.நா.வுடன்...

அவர் வரவேற்றுள்ளார்.

ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தை வரவேற்பதாகவும் ஆணைக்குழு பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றுவதன் மூலம் அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் நீதி, சமத்துவம், நியாயம், நல்லிணக்கம் கிடைக்க வேண்டும் எனவும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

## வன்னி...

நேரடியாக பங்களிப்பு செய்யாத போதிலும் உதவித்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கி வருவதாக கூறப்படுகின்றது.

## அரச காணிகளில்...

நாள்களுக்குள் வெளியேறும்படி கடந்த மார்ச் மாதம் படிவம் ஒட்டப்பட்டது. ஆனால் இவர்கள் இந்தக் காணிகளில் இருந்து வெளியேறவில்லை. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் கண்டாவளைக் காணி அபிவிருத்தி உத்தியோகத்தரால் கடந்த திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வைத்தியசாலைக் காணியில் குடியிருக்கும் எட்டுக் குடும்பங்களுக்கும் எதிராக ஒரு வழக்கும், கண்டாவளை ஊரியான் பிரதேசத்தில் உள்ள அரச காணியில் குடியிருக்கும் ஒருவருக்கு எதிராக ஒரு வழக்கும் என இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளின் சந்தேகநபர்கள் விசாரணையின் போது நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர். ஆனால் உரிய முறையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லையெனவும் வைத்தியசாலைக் காணியில் உள்ள 8 குடும்பங்களுக்கும் எதிராக எட்டு வழக்குகள் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட வேண்டியிருக்கிறது எனவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி இந்த வழக்கு தவணையிடப்பட்டதுடன், சந்தேகநபர்களை தலா 50 ஆயிரம் ரூபா ஆள்பிணைகளில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

## உறவுகளைத்...

கூட்டத்தை பருத்தித்துறை பிரதேசசபையின் தலைவர் பூ.சஞ்சீவன் ஏற்பாடு செய்திருந்தார். அப்பகுதியில் வாழும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிள்ளைகள் காணாமல் போகும்போதும், படுகொலையாகும் போதும் பாராமுகமாக இருந்த இவர்கள், தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டுமாக இருந்தால் சர்வதேசத்தின் அழுத்தம் வேண்டும். அதற்காக தமிழ் மக்களின் இழப்பு இன்னும் அதிகமாக இருக்கவேண்டும் என்றெல்லாம் கதை கூறியவர்கள். இன்று காணாமல் போனவர்களை மீட்டுத்தருகின்றோம் என்று நீலிக்கண்ணீர் விடுகின்றனர் என்று வயோதிபர் ஒருவார் மண்ணை வாரி தூற்றிக்கொண்டு போனதையும் அங்கு வந்திருந்த மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதேவேளை படையினர் வசமிருக்கும் தனியாருக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாகவும் தகவல் திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாவை சேனாதிராசா அங்கு தெரிவித்தார். இதன் ஒரு கட்டமாக இவ்வாறான காணிகளின் உறுதிப்பத்திரங்களின் பிரதியை தம்மிடம் சமர்ப்பிக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## எரிபொருள்...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சரிடம், சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் இலங்கையில் அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படவில்லையே. அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய,

இந்நிலையில், எரிபொருட்களின் விலைகள் சர்வதேச சந்தையில் குறைவடைந்தாலும் இலங்கையில் உடனடியாக அவ்வாறானதொரு விலைக் குறைப்பை ஏற்படுத்தமுடியாது. காரணம், தற்போது விற்பனை செய்யப்படும் எரிபொருட்கள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டவையாகும். அவை வாங்கும் போது அதிக விலைக்கு வாங்கப்பட்டிருக்கலாம். அதனால் அவற்றை சடுதியாக குறைந்த விலைக்கு விற்பனை செய்தால் நட்டத்தை எதிர்நோக்க நேரிடும்.

இதனால், சர்வதேச சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள விலைக் குறைப்பு நீண்ட கால நோக்குடையதாக அமைந்தால் இலங்கையிலும் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு அந்த மகிழ்ச்சியினை பொதுமக்கள் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று அமைச்சர் கூறினார்.

## மருத்துவர் வீடு...

பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். இதற்கு நிறைவுகாண் மருத்துவர் சங்கம், நிறைவுகாண் மருத்துவர் தொழில்நுட்ப ஒன்றியம், தாதியர் சங்கம், பல் மருத்துவர் சங்கம் என்பனவும் ஆதரவு வழங்கியிருந்தன.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த மருத்துவர் சங்கத் தலைவர் தமது அடையாள பணிப் பகிஷ்கரிப்பு குறித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும், எதிர்வரும் ஒரு வார காலப்பகுதிக்குள் வைத்தியர் ஜெயக்குமாரின் வீடு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தமது போராட்டத்திற்கு வைத்திய சாலையின் ஏனைய தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சங்கம் குறித்த விடயம் தொடர்பில் ஒருநாள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக தன்னுடன் ஆலோசனை நடத்தவில்லை எனவும் தமக்கு இது குறித்து தெரியப்படுத்தவில்லை எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார். தாம் காலை பத்திரிகையை பார்த்ததன் பிற்பாடே இவ்விடயத்தை அறிந்துகொண்டதாகவும் தெரிவித்தார்.

இருந்தும் இவ்விடயம் குறித்து சுகாதார அமைச்சிற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்த அவர், வைத்திய சாலையில் முறைகேடுகள் எவையும் இடம்பெறவில்லை எனவும் தம்மை இடமாற்றம் செய்யும் நோக்கிலேயே முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக வைத்தியர் ஜெயக்குமார் மற்றும் மருத்துவர் சங்கத்தினர் குற்றம் சுமத்துவதாகவும் குறிப்பிட்டார். (பா)

# சிறைக் கைதிகளுக்கு பனைசார் தொழிற்பயிற்சி

## ஆரம்ப நிகழ்வு நேற்று



(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலை கைதிகளுக்கான பனம்பொருள்சார் உற்பத்தி தொடர்பான கைவினைப் பயிற்சிநெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய பனை அபிவிருத்தி சபையினர் யாழ். சிறைச்சாலையுடன் இணைந்து இப்பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளனர்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.செனரத் பண்டார தலைமையில் நேற்று மாலை 3.00 மணிக்கு பயிற்சி நெறிக்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா, பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பனை அபிவிருத்திச் சபை அதிகாரி கோபாலகிருஷ்ணன், பயிற்றுனர் மற்றும் யாழ். சிறைச்சாலை பிரதம சிறைக் காப்பாளர் இந்திரகுமார், சிறைச்சாலை நலன்புரிச் சங்க அதிகாரி பாலகிருஷ்ணன் சுசிதரன் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எஸ்)

# போதைப் பொருள் குற்றச்சாட்டில் 19 ஆயிரத்து 57 பேர் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் குற்றச்சாட்டில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதியில்19057 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு, சோதனை நடவடிக்கைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 12 கிலோ 265 கிராம் ஹெரோயின், 51451 கிலோ கஞ்சா, 4 கிலோ 44 கிராம் கோகேன், 1 கிலோ 380 கிராம் ஒபியன், 280 மில்லி கிரேம் ஹாஸ்ஸ் 3 கிலோ மெனமிபிடமின் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப் பொருள் விற்பனை குறித்து தகவல் அறிந்தால்,

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு - 011234334, 011 2447943 பொலிஸ் கட்டளையிடும் மத்திய பிரிவு - 011 285 4880

அவசர அழைப்புப் பிரிவு - 119 போன்ற இலக்கங்களுக்கு அழைத்து தகவல் வழங்கலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

# தற்காலிக கொட்டகையில் கார் மோதி விபத்து

## திருவிழாக் காண வந்த இருவர் பலி

கொட்டாஞ்சேனை ஜோர்ஜ் ஜயவர்த்தன சில்வா மாவத்தையில் இருந்து ஜம்பட்டா வீதி வழியாக பயணித்த கார் ஒன்று தற்காலிகக் கொட்டில் ஒன்றில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை காண வந்து தற்காலிகக் கொட்டிலில் தங்கியிருந்த இருவரே இவ்வாறு கார் மோதி உயிரிழந்துள்ளனர்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் கார் தற்காலிக கொட்டிலில் மோதியதாகவும் இதில் 70 வயது பெண்ணும் 8 மாத குழந்தையும் உயிரிழந்துள்ளதோடு மேலும் 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தை அடுத்து காரின் சாரதி குறித்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொட்டாஞ்சேனை பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தூக்கிட்டு இளம் குடும்பஸ்தர் மரணம்

(சுழிபுரம்)

கடன் தொல்லையினால் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மத்திய சுழிபுரம் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராஜா செல்வச்சந்திரன் (வயது-21) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

20 ஆயிரம் ரூபா ஒருவருக்கு கடன் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் கடன் கொடுத்த நபர் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டுள்ளார்.

சத்தம் போட்டதை ஏற்க மறுத்த குறித்த குடும்பஸ்தர் வேட்டியினால் தூக்குப் போட்டுத் தொங்கியுள்ளதாக இறந்தவரின் உறவினர் தெரிவித்தார். (எஸ்)

# கல்விசாரா ஊழியர்களுக்கு ஆதரவாக விரிவுரையாளர்களும் பணிப் பகிஷ்கரிப்பு

எதிர்வரும் ஜுலை 4ஆம் திகதி தொடக்கம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வுக் கோரிக்கை மாத்திரமன்றி பல்கலைக்கழக துறைகளில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் வேறு வழியின்றி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்ததாக சம்மேளனத்தின் தலைவர் நிர்மால் ரஞ்ஜித் தேவப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது இந்தத் தீர்மானம் குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக கொழும்பு நூலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

இரண்டு கல்வி அமைச்சர்கள் இருந்தும் பல்கலைக்கழக கட்டமைப்பு தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அதனை அமைச்சர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையையே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு காரணம் தனியார் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப் பகிஷ்கரிப்புக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக நிர்மால் ரஞ்ஜித் தேவப்பிரிய தெரிவித்தார்.

# இலங்கையர்கள் தொடர்பில் புதிய சட்ட மூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராஜ்சியத்தில் பணியாற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளின் உரிமைகள் மற்றும் சலுகைகளை அதிகரிப்பதற்கான சட்ட மூலம் ஒன்று அந்த நாட்டின் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வரவேற்பு கிடைத்துள்ளதாக ஐக்கிய அரபு இராஜ்சியத்தின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஏற்கனவே இந்த சட்ட மூலம் குறித்து அபுதாபியில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்தச் சட்ட மூலத்தின் மூலம் ஐக்கிய அரபு நாடுகளில் பணியாற்றுகின்ற ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் பயன்பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பணியாளர்கள் அனுபவிக்கின்ற சித்திரவதைகள், அதிக வேலைப்பளு, குறைந்த வருமானம், துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் இருந்து இந்தச் சட்ட மூலத்தின் மூலம் பாதுகாப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 147 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

மேற்கு ஆபிரிக்க நாடான பெனின் இராஜ்ஜியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட 147 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர். இவர்கள் நேற்று பிற்பகல் 1.15 அளவில் நாட்டை வந்தடைந்ததாக விமான நிலைய குடிவரவு குடியகல்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடு திரும்பியவர்களில் 20 பெண்களும் அடங்குகின்றனர். நாடு திரும்பிய இலங்கையர்களின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், அவர்கள் தேசிய இரகசிய தகவல் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக விமான நிலைய குடிவரவு குடியகல்வு அலுவலகம் அறிவித்துள்ளது.

# நெடுங்கேணியில் மண் அகழ்வு சீனப் பிரஜை உட்பட மூவர் கைது



(கொழும்பு)

வவுனியா நெடுங்கேணி நயினாமடுவில் வனப்பிரதேசமாக ஒதுக்கப்பட்ட பகுதியில் சட்டவிரோத முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட சீன நிறுவனமொன்றின் உத்தியோகஸ்தர்களான சீன பெண் அலுவலர் மற்றும் இரண்டு இலங்கை பிரஜைகள் நேற்று வவுனியா வனவள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கனரக வாகனங்கள் மூலம் மண் அகழ்வில் ஈடுபடுவதாக வனவள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து வட்டார வனவள அதிகாரி க. யோகரத்தினம், பகுதி வன உத்தியோகஸ்தர் ஈ.ஏ.என் பிரேமதாச, அசேல குணரத்தின, குமார, பி.எம். திலகரத்தின, பி. பரமேஸ்வரன், எஸ்.எம்.மஞ்சு அபயசிங்க ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்படி பிரதேசத்தில் திடீர் தேடுதலை மேற்கொண்டபோது மூவரையும் கைது செய்திருந்ததுடன் மண் அகழ்விற்கு பயன்படுத்திய பைக்கோ வாகனம் மற்றும் டிப்பர் என்பவற்றையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது சீன பிரஜை கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் இலங்கை பிரஜைகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்களும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் வாகனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெறும் என்று வனவள அதிகாரிகள் தெரிவித்தனர். (160)

# ஆசிய இளைஞர் விளையாட்டு விழா இலங்கையில்

2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டு விழாவை நடத்துவதற்கான நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது. அம்பாந்தோட்டையில் இவ் விளையாட்டு விழா நடத்தப்படவுள்ளது.


**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- Dip.in PC Application & Office Management
- Dip.in Desktop Publishing
- Internet & e-mail (Workshop)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 22-06-12
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 23-06-12

Centre for Information Technology
-Executive Officer- (C/1605)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அர்புதன் அச்சகத்தில் 2012 யூன் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.